MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY, THIRUVANMIYUR, MADRAS-41.

ஸ்ரீ துணை.

திருக்குற்றாலக்குறவஞ்சி.

இஃது,

களத்தூர்த் தமிழ்ப்புலவர்

வேதகிரிமுதலியார்-குமாரர்

ஆறுமுகமுதலியாரால்

பரிசோதித்து,

அ-வீராசாமிநாயுடு அவர்களால்

தமது

சற்குணநிதியச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

பிரஜோற்பத்தி ௵ - தைமீ

விளம்பரம்.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பதியாதெனில் சென்னபட்டணம் பீங்கான்கடைக்கடுத்த பாபன்ரோட்டில்-௫௮௪-வது நெம்பருடைய புத்தகஷாப்பிலும், கும்பகோணம் பெரியகடைத்தெருவிலிருக்கும் உப்புக்கடை நாராயணசாமிநாயக்கரிடத்திலும், மதுரை புதுமண்டபத்தில் புத்தகவியாபாரஞ்செய்யும் சண்முகபிள்ளையிடத்திலும், திரிசிரபுரம் தோடிக்கடைத்தெருவிலிருக்கும் தி. சபாபதிபிள்ளையிடத்திலும், பாலக்காட்டில் ஷாப்புக்கடைவைத்திருக்கும் அப்பாவுபிள்ளையிடத்திலும், பலவித தமிழ்கிரந்தங்களும், அகஸ்தியர்முதலிய பெரியோர்கள் திருவாய்மலர்ந்தருளிய வைத்தியசாஸ்திரங்களும் - ஆழ்வாராதிகள் அருளிச்செய்த திவ்வியப்பிரபந்தங்களும், கம்பராமாயணவசனமும், சில ஜோதிஷசாஸ்திரங்களும், வேண்டியவர்கள் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

இப்போது நூதனமாயச்சிட்டிருக்கும் புத்தகங்கள்.

மரணகண்டியென்னும்-ஜோதிஷசாஸ்திரம்.

நவக்கிரகசிந்தாமணியென்னும்-ஜாதகசூடாமணி.

அச்சிட்டுவரும் புத்தகங்கள்.

ஸ்ரீராமர்மகாவிந்தம்

மார்க்கண்டன்சரித்திர அம்மானை

தேரையர்பெருநூல்காவியம் தரு௱

தன்வந்திரிதைலம் ௫௱

கணிதாமிர்தமென்னும்-ஜோதிஷசாஸ்திரம்.

அஸ்வனிதேவர்வைத்தியம் ௱

தேரையர்காசலை ௩௱

சாவித்திரிநாடகம்

இங்ஙனம்.

அ - வீராசாமிநாயுடு.

உ

திருச்சிற்றம்பலம்.

திருக்குற்றாலக்குறவஞ்சி.

விநாயகர் துதி.

ஆசிரிய விருத்தம்.

பூமலியிதழிமாலைபுனைந்தகுற்றாலத்தீசர்
கோமலர்ப்பாதம்போற்றிக்குறவஞ்சித்தமிழைப்பாட
மாமதத்தருவிபாயுமலையெனவளர்ந்தமேனிக்
காமலிதருப்போலைந்துகைவலான்காவலானே.

சுப்பிரமணியக்கடவுள் துதி.

ஆசிரியவிருத்தம்.

பன்னிருகைவேல்வாங்கப்பதினொருவர்படைதாங்கப்பத்துத்திக்கும்
தன்னவவீரரும்புகழமலைகளெட்டுங்கடலேழுநாடியாடப் [ன்றாய்த்
பொன்னின்முடியாறேந்திடஞ்சுதலையெனக்கொழித்துப்புயநான்மூ
தன்னிருதாடருமொருவன்குற்றாலக்குறவஞ்சித்தமிழ்தந்தானே.

திரிகூடநாதர் துதி.

ஆசிரியவிருத்தம்.

இலைகளாய்க்கிளைத்தபலாக்கொம்பெலாஞ்சதுர்வேதக்கிளைகளீன்ற
கனியெலாஞ்சிவலிங்கங்கனியெலாஞ்சிவலிங்கக்கனிகளீன்ற
சுளையெலாஞ்சிவலிங்கம்வித்தெலாஞ்சிவலிங்கச்சொரூபமாக
விளையுமொருகுறும்பலவின்முளைத்தெழுந்தசிவக்கொழுந்தைவேண்
[டுவோமே

குழல்வாய்மொழியம்மை துதி.

ஆசிரியவிருத்தம்.

தவளமதிதவழ்குடுமிப்பனிவரையின்முளைத்தெழுந்துதகைசேர்முக்
பவளமலைதனிலாசைபடர்ந்தேறிக்கொழுந்துவிட்டுப்பருவமாகி. [கட்
புவிழுதரைட்பூங்கடப்பந்தாமரையுமீன்றறுகோட்டாட்டலீன்று
குவலயம்பூத்தருள்கொடியைக்கோதைகுழல்வாய்மொழியைக்கூறு
[வோமே

மூவர் துதி-ஆசிரியவிருத்தம்.

தலையிலேயாறிருக்கமாயிக்காகத்தாங்குகடலேழனைத்ததிருக்குற்றாலர், சிலையிலேதடித்ததடம்புயத்தைவாழ்த்திச்செழித்தகுறவஞ்சிநாடகத்தைப்பாட, வலையிலேயலைதக்கவேயிறையும்மதியிலேபூவையந்நாளழைப்பித்தானும், கலையிலேவிடைத்தபொருளாற்றிற்போட்டுக்கனைகுளத்திலெடுத்தானுங்காப்பதாமே.

குற்றாலக்குறவஞ்சி.

அகத்தியர்வாதவூரர் துதி.

ஆசிரியவிருத்தம்.

சித்தர்திரிகூடலிங்கர்குறவஞ்சிநாடகத்தைநிகழ்த்தவேண்டி
முத்தர்திருமேனியெல்லாமுருகவேதமிழுரைத்தமுனியைப்பாடி
இத்தரையிலாத்துமம்விட்டிறங்குநாட்சிலேட்டுமம்வந்தேறுவண்ணம்
பித்தனடித்துணைசேர்ந்தவாதவூரானடிகள்பேணுவோமே.

சரஸ்வதிதுதி.

ஆசிரியவிருத்தம்.

அடியிணைமலருஞ்செவ்வாயாம்பலுஞ்சிவப்பிலுள்ளை
நெடியபூங்குழலுமைக்கணீலமுங்கறுப்பிலுள்ளைப்படிவ
மும்புகழுஞ்சங்கப்படிகமம்போல்வெளுப்பிலுள்ளைக
கொடிதனைத்திருக்குற்றாலக்குறவஞ்சிக்கியம்புவாமே.

நூற்பயன்.

ஆசிரியவிருத்தம்.

சிலைபெரியவேடனுக்குநரிக்கும்வேகச்செல்வருக்குந்தேவருக்குமிரங்கிபேறுள், கொலைகளவுகட்காமங்குருத்துரோகங்கொடியடஞ்ச பாதகமுந்தீர்த்ததாலே, நிலவணிவார்குற்றாலநினைத்தபேர்களனைத்த வரம்பெறுவாதுநினைக்கவேண்டிப், பலவளஞ்சேர் குறவஞ்சிநாடகத்தைப்படிப்பவர்க்குங்கேட்பவர்க்கும்பலனுண்டாமே,

அவையடக்கம்-ஆசிரியவிருத்தம்.

தாரிணைவிருப்பமாகத்தலைதலில்முடிக்குந்தோறும்
நாரினைப்பொல்லாதென்றுமறுப்பதுந்தார்தள்ளுவாரோ
சீரியதமிழ்மாலைக்குட்செல்வர்குற்றாலநாதர்
பேரினுமெல்லனதுசொல்லைப்பெரியவர்தள்ளார்தாமே.

கட்டியக்காரன்வருகிற-விருத்தம்.

தேர்கொண்டவசந்தவீதிச்செல்வர்குற்றாலத்தீசர்
பார்கொண்டவிடையிலேறும்பவனியெச்சரிக்கைகூற
நேர்கொண்டபுரிநூன்மார்புநெடியகைப்பிரம்புமாகக்
கார்கொண்டமுகிலென்னக்கட்டியக்காரன்வந்தான்.

இ-ம்-தோடி-தாளம்-சாப்பு

கண்ணிகள்.

பூமேவுமனுவேந்தர்தேவேந்தர்முதலோராப்
புரந்திடுஞ்செங்கோலானபிரம்புடையான்

உ. மாமேருச்சிலையாளர்வாதர்குற்றாலநாதர்
வாசற்கட்டியக்காரன்வந்தனனே.

கட்டியக்காரன்-சொல்லுகிற-விருத்தம்.

மூக்கெழுந்தமுத்துடையாரணிவருக்குந்தென்கைலாசநாதர்வீதி
வாக்கெழுந்தகுறுமுனிக்காமதியெழுந்தகரங்காட்டும்வள்ளலார்சீர்,
தேக்கெழுந்தமலைநான்குஞ் சிலம்பெழுந்தபாதர்விடைச்சிலம்பின்மேவு
தி,மேக்கெழுந்தமதிசூடிக்கிழக்கெழுந்தஞாயிறுபோல்மேவினாரே.

திரிகூடநாதர்பவனிவருதல்.

தரு-இராகம்-பந்துவராளி;-தாளம்-சாப்பு

பல்லவி,

பவனிவந்தனரே-மழவிடைப்- பவனிவந்தனரே.

அநுபல்லவி.

அவனிபோற்றியகுறும்பலாவுறையமவுண்நாயகரானநாயகர்
சிவனுமாயரியயனுமானவர்சவுனமால்விடையதனிலே ॥ (பவனி)

[சரணங்கள்.]

௧. அண்டர்கூட்டமுமுனிவர்கூட்டமுமசுரர்கூட்டமுமனிதராகிய [வே
தொண்டர்கூட்டமுமிமைப்பிலாரெனச் சூழ்ந்துதனித்தனிமயங்க
பண்டைநாரிவர் தேவரிவரெனப் பகுத்துநிற்கவிய வேலைதோறுந்
தோறும்,மண்டலீகரைநந்திப்ரம்படிமகுடகோடியிற்புடைக்கவே

௨. தடுப்பதொருகரங்கொடுப்பதொருகரந்தரித்தசுடர்மழுவிரித்ததொ
ருகரம்,எடுத்தசிறுமதிபிடித்தவொருகரமிலங்கைப்பணியதுலங்
கவே, அடுத்தவொருபுலிகொடுத்தசோமனுமானைகொடுத்தவிதானை
ச்சேலையும், உடுத்ததிருமருங்கசையமாலயன்றொடுத்தபரிகரிமிசை
யிலே. (பவனி)

தொடருமொருபெருச்சாளியேறியதோன்றல்செயப்படைதாங்க
வே,படல்குலாவியந்தாவைவாகனத்தரசுவேல்வலம்வாங்கவே
படலமார்பினிற்கொன்றையாலிகை பதக்கமணியொளிதேங்கவே
புடையநாயகன்வரவுகண்டுகண்டுலகெலாந்தழைத்தோங்கவே(பவ)

இடியின்முழக்கொடுபடருமுகிலெனயானைமேற்கன பேரிமுழக்க
முந், துடியின்முழக்கமும்பாந்தத்திசைக்கரி துதிக்கையாற்செவிபு
தைக்கவே, அடியார்முழக்கிய திருப்பல்லாண்டிசையடைத்தசெவிக
ளுந்திறக்கமூவர்கள், வடிசெய்தமிழ்திருமுறைகளொருபுறமறைக
ளொருபுறமவிளங்கவே, (பவனி)

சனகதட்புருகின்னரங்கழலாசனிலோமிழற்றவே
ம்பனர்திருமுத்தின்சிவிகைகவிகைபொன்றுலகட்டநிழற்றவே
வநிதைமார்பலகுஞ்சஞ்சாமரைவரிசைவிசிறிகழற்றவே
தனதனிந்திரன்வருணன்முதலியசகலதேவருங்கழுத்தவே(பவனி

௬, சைவர்மேலிடச்சமணர்கீழிடச்சகலசமயமுமேற்கவே
தையலாழியங்கருணைமாலொடுகமலத்தோன்புடைதாக்கவே.
ஐவர்நாயகன்வந்தனன்பலவமரர்நாயகன்வந்தனன்
தெய்வநாயகன்வந்தனனெனச்சின்னமெடுத்தெடுத்தூர்க்கவே(ப)

௭, சேனைபெருக்கமுங்கானைப்பெருக்கமுந்தேரின்பெருக்கமுந்தாரின்பெருக்கமும், ஆனைப்பெருக்கமுங்குதிரைப்பெருக்கமுமலகினுமுழுதுநெருக்கவே, மோனைக்கொடிகளின்காடுநெடுவெளிமூடியடக்கலுமோடியிருண்டபி, ஞானச்சுடர்விரியிடபகேதனமெழுந்து திசைதிசைவிளங்கவே. (பவனி)

௮. கொத்துமலர்க்குழல்தெய்வமங்கையர்குரவைபரவையை நெருக்கவே, யொத்ததிருச்செவியிருவர்பாடல்களுலகமேழையுமுருக்கவே மத்தளம்புயல்போன்முழக்கிடமயிலனார் நடம்பெருக்கவே, சத்திபயிரவி கௌரிகுழன்மொழித்தையலாளிடமிருக்கவே. (பவனி)

பவனிகாணப் பெண்கள்வருகின்ற

விருத்தம்.

பாலேறும்விடையில்வருந்திரிகூடப் பெருமானார்பவனிகாணக்
காலேறுங்காமனுக்குக்கையேறும்படைப்பவுஞ்சாய்க்கன்னிமார்கள்
சேலேறுங்கலகவிழிக்கணைதீட்டிப்புருவநெடுஞ்சிலைகள்கோட்டி
மாலேறப்பொருதுமென்றுமணிச்சிலம்புமுரசறையவருகின்றாரே.

பெண்கள்சொல்லுகின்ற-கண்ணிகள்.

இராகம் - புன்னாகவராளி - சாப்புதாளம்.

௧. ஒருமானைப்பிடித்துவந்த பெருமானைத்தொடர்ந்தவரு
மொருகோடிமான்கள்போல வருங்கொடிமடவார்

௨. புரிநூலின்மார்பனிவனயனென்பாரயனாகிற்
பொங்கரவமேதனிச் சங்கமேதென்பார்

௩. விரிகருணைமாலென்பார் மாலாகில்விழியின்மேல்
விழியுண்டோமுடியின்மேல் முடியுண்டோவென்பார்

௪. இருபாலுந்தான்முகனுந் திருமாலும்வருகையா
லீசனிவன்திரிகூட வாசனிவனென்பார்

௫. ஒருகைவளைபூண்டபெண்கள் ஒருகைவளைப்பூணமறந்
தோடுவார்நகைப்பவரா நாடுவார்கவிழ்வார்

௬. மெய்வளையுமறுவுடையதெய்வநாயகன்முடித்த
வெண்மதியம்விளங்குமெங்கள் பெண்மதிபோவென்பார்

௭. இருதனத்துராவிக்கைதன்னை யுராயிலுடைதொடவோ
இந்தவுடராவிக்கையெனச் சந்தமூலக்கிவோர்

குற்றாலக்குறவஞ்சி.

௮. ஒருதழுண்ட்புறம்போகக் கண்ணுக்குமையெடுத்த
கையுமாயொருதண்ணிட்ட மையுமாய்வருவார்

௯. திருபணிவணன்னகரத்தெருவிலேதெருநேரம்
நில்லாளேஒருவசனஞ் சொல்லாளேயென்பார்

௰. பைவளைத்துக்கிடக்குமிவன்மெய்வளையும்பாய்புகட்குப்
பசியாதோதென்றலைத்தான் புசியாதோவென்பார்

௰௧. இவ்வளைக்கைத்தோளழுந்தவிவன்மார்பிலழுந்தாள
வென்முலைதமக்கெழுந்த வன்னமுலையென்பார்

௰௨. மைவளையுங்குழல்சோரக்கைவளைகொண்டாளிதென்ன
மாயமோசடைதரித்த ரூபமோவென்பார்

வசந்தவல்லிவருகின்ற-விருத்தம்.

தன்னகர்ப்பெருமான்முன்போய் நாணமுங்கலையுந்தோற்ற
கன்னியர்சதுப்போற்சாட்டிக் காமவேள்கலகமூட்டிப்
பொன்னணிதிலகந்தீட்டிப் பூமலர்மாலைசூட்டி
வன்னமோகினியைக்காட்டி வசந்தமோகினிவந்தாளே.

இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்

கண்ணிகள்.

௧. சிங்காரபூஷணம்பூட்டித்திலதந்தீட்டி
மானைகண்ணாலேமருட்டிச்
சிங்காரமோகனப்பெண்ணாள்வசந்தவல்லி
தெய்வரம்பைபோலவேவந்தாள்

௨. கண்ணுக்குக்கண்ணிணைசொல்லத்-திரிகூடக்
கண்ணுதலைப்பார்வையால்வெல்லப்
பெண்ணுக்குப்பெண்மயங்கவே-வசந்தவல்லி
பெடையன்னம்போலவேவந்தாள்

௩. கையாரச்சூடகமிட்டு-மின்னாவெல்லக்
கண்ணிலொருநாடகமிட்டு
ஒய்யாரமாகநடந்து-வசந்தவல்லி
யோவியம்போலவேவந்தாள்

௪. சல்லாபமாதிலீலர்-குற்றாலநாதர்
சங்கெநடும்வீதிதனிலே
உல்லாசமாகவேபோல்-வசந்தவல்லி
பூர்வசிபுதாணவேவந்தாள்

(இதுவுமது)

இ-ம்-பைரவி அடதாளசாப்பு

கண்ணிகள்.

௧. இருண்டமேகஞ்சுற்றிச்சுருண்டுசுழியெறியுங்கொண்டையாள்குழை
ஏறியாடிநீண்டைசக்குழையாடும்விழிக்கெண்டையாள்

திருந்துபூமுருக்கினரும்புபோலிருக்குமிதழினாள்-கரிச்
சிலையைப்போல்வளைந்துபிறையைப்போலிலங்குநுதலினாள்

உ. அரம்பைதேசவில்லும்விரும்பியாசைசொல்லும்புருவத்தாள்பிறர்
அறிவைமயக்குமொருகருவமிருக்குமங்கைப்பருவத்தாள்
கரும்புபோலினித்துமருந்துபோல்வடித்தசொல்லினாள்-கடல்
கத்துந்திரைகொழித்தமுத்துநிரைபதித்தபல்லினாள்

ங. பல்லினழகையெட்டிப்பார்க்குமூக்கிலொருமுக்கினாள்-மதி
பழகும்வடிவுசங்கையழகுகுடிகொளுமுகத்தினாள்
வில்லு பணிபுனைந வல்லிக்கமுகைவென்றகழுத்தினாள் ஜகம்
விலையிட்டெழுதியின்பதிலையிட்டெழுதுந்தொய்யிலெழுத்தினாள்

ச. கல்லுப்பதித்ததங்கச்செல்வக்கடகமிட்டசெங்கையாள்-எங்கும்
கச்சுக்கிடக்கின்றதிச்சைக்கிடக்குமிருகொங்கையாள்
ஒலுங்கருத்தர் கைசலலுஞ்சுழிக்குமழிலுந்தியாள் மீது
ஒழுங்குகொண்டுள்ளத்தைவிழுங்குஞ்சிறுரோமபந்தியாள்

ரு. துடியுள்ளடக்கியொருபிடியுள்ளடங்குஞ்சின்னவிடையினாள்-காமத்
துட்டனார்மனைகளுக்குக்கட்டுகதலிவாழைத்தொடையினாள்
அடிக்குவர்ணச்சிலம்பெடுத்துநெறிபிடித்தவுடையினாள் மட
அன்னநடையிலொருசின்னநடையிலும்நடையினாள்.

சா. வெடித்தகடலமுதையெடுத்துவடிவுசெய்தமேனியாள்-ஒரு
வீமப்பாகிற்பெற்றகாமப்பாலுக்கொத்தசீனியாள்
பிடிக்கைந்தவல்லிமெக்கடிபோல்சத்தவல்லிபெருக்கமே-சத்தி
பீடவாசர்திரிகூடநாதர்சித்தமுருக்குமே

வசந்தவல்லி- பந்தடிக்கின்ற

விருத்தம்.

வித்தகர்திரிகூடத்தில் வெளிவந்தவசந்தவல்லி
தத்துவிளையாட்டாலே தடமுலைப்பணைப்பினாலே
தத்தணிகரங்களசெப்ப நாலடிமுன்னேயோங்கிப்
பத்தடிபின்னேவாங்கிப் பந்தடிபயில்கின்றாளே

இராகம்-பைரவி- சாப்புதாளம்.

கண்ணிகள்.

க. செங்கையில்வண்டுகலின்கலினென்றுசெயஞ்செயமென்றாட- இடை
சங்கதமென்றுசிலம்புபுலம்பொடுதண்டைகலந்தாட-இருகொங்
கைகொடும்பகைவென்றனமென்றுகுழைந்துகுழைந்தாட- மலர்ப்
பைங்கொடிநங்கைவசந்தசௌந்தரிபந்துபயின்றனளே

உ. பொங்குகனங்குழைமண்டியகெண்டைபுரண்டுபுரண்டாட குழல்
மங்குலில்வண்டுகலைந்ததுகண்டுமதன்சிலைவண்டோட-இனி
இங்கிதுகண்டுலகென்படுமென்படுமென்றிடைதிண்டாட-மலர்ப்
பங்கயமங்கைவசந்தசௌந்தரிபந்துபயின்றனளே

குற்றாலக்குறவஞ்சி.

௩. சூடகமுன்கையில்வால்வளைகண்டிருகோள்வளைதின்றிட-புனை
பாடகமுஞ்சிறுபாதமுமங்கொருபாவனைகொண்டாட-நய
நாடகமாடியதோகைமயிலெனநன்னகர்வீதியிலே-அணி
யாடகவல்லிவசந்தவொய்யாரியடர்ந்துபந்தாடினளே

௪. இந்திரைாயோவிவள்சுந்தரிபோதேவரம்பையோமோகினியோ மன
முந்திடகோவிழிமுந்தியதோகாமுந்தியதோவெனவேஉயர்
சந்திரசூடர்குறும்பலவீசுரர்சங்கணிவீதியிலே-மணிப்
பைந்தொடிநாரிவசந்தவொய்யாரிபொற்பந்துகொண்டாடினளே

இதுவும்-வசந்தவல்லி பந்தாடுகின்ற

விருத்தம்.

கொந்தடிப்பூங்குழல்சரியநன்னகரில்வசந்தவல்லிகொடியகாமன்
முந்தடிபிந்தடியிடைபோய்மூன்றடிநாலடிநடந்துமுடிகிமாதர்
சந்தடியிற்றிருகியிடசாரிவலசாரிசுற்றிச்சகிமார்சூழப்
பந்தடிக்கும்பாவனையைப்பார்க்கவயனாயிரங்கண்படைத்திலானே.

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

பந்தடித்தனள்வசந்தசுந்தரிவித்தையாகவே

அநுபல்லவி.

மந்தரமுலையசலாடமகரக்குழைசளூசலாடச்-சுந்தரவிழிபூசலாடத்
தொங்கத்தொங்கத்தொங்கத்தொம்மெனப் (பந்த)

சரணங்கள்.

௧. பொன்னிமிளிரளிவில்வந்துதாவியமின்னலினெளிவுபோலவே
சொன்னயத்கினைநாடிநாடித்தோழியருடன்கூடிக்கூடி
நன்னகர்த்திரிகூடம்பாடிநகுர்தத்திகுர்தத்திகுர்தமதொம்மெனப்(ப

வசந்தவல்லி சுவாமிகளைக்காண்கிற

விருத்தம்.

வருசங்குவீதிதன்னில்வசந்தபூங்கோதைகாலி
விருபந்துகுதிகொண்டாடவிருபந்துமுலைகொண்டாட
வொருபந்துகைகொண்டாடவொருசெப்பிலஞ்சுபந்துந்
தெருவந்துவித்தையாடுஞ்சித்திரையெதிர்கண்டாளே

தரு-இ-ம்-அடாணா-ரூபகதாளம்.

பல்லவி.

இந்தச்சித்தாரோ-வெகு

அநுபல்லவி.

வித்தைக்காரராகவிடையில்வந்தாரோ (இந்த

குற்றாலக்குறவஞ்சி.

சரணங்கள்.

௧. நாகம்புயத்திற்கட்டிநஞ்சைக்கழுத்திற்கட்டிக்
காகமறுகாமனெலும்புங்கோடுகட்டி
பாகந்தனிலொருபெண்பச்சைக்கிளிபோல்வைத்து
மோகமாயொருபெண்ணைமுடியில்வைத்தார் (இந்தச்)

௨. மெய்யிற்சிலம்பழகுங்கையின்மழுவழகும்
மையார்விழியார்கண்டால்மயங்காரோ
செய்யசடையின்மேலேதிங்கட்கொழுந்திருக்கப்
பையைவிரிக்குதம்மாபாம்புகம்மா (இந்தச்)

௩. அரிக்கண்டார்வைபாலயனைக்கண்டங்கமாக
உருக்கெப்பேபாட்டார்கண்டவுடனேதான்
பெருக்கப்பார்க்கிலெங்கள்திருக்குற்றாலர்போல
விருக்குதிவர்செய்மாயமொருக்காலே (இந்தச்)

தோழிமார்சொல்லக்கேட்டு
வசந்தவல்லி-மோகங்கொள்ளுதல்.

விருத்தம்.

திங்களைமுடித்தார்கண்டாய்திரிகூடச்செல்வர்கண்டா
யெங்குளசித்துக்கெல்லாமிறையவரிவரோவென்று
தங்கைமார்பலருங்கூறநன்மொழிக்குத்தான்மாற்றி
மங்கையாய்வசந்தவல்லிமயங்கொண்டாள் மயல்கொண்டாளே.

இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

௧. முனிபரவவினியானோமுழுப்பலவின்கனிதானோ
கனியிதழ்மைநந்தேசநங்கருள்திருக்கைதானோ
இனகரன்போற்சிவப்பழகுந்திருமிடற்றிற்கறுப்பழகும்
பனகவணிக்காட்டுங்கண்டாற்பாவையுந்தானுருகிடாதா

௨. வாசனைக்கண்டேருக்குதையோமயக்கமதாய்வருகுதையோ
மோகமென்பதிதுதானோமுன்னமேநானறிவேனோ
ஆகமெல்லாம்பசந்தேனேஅன்னைசொல்லுங்கசந்தேனே
தாகமன்றிப்பூணேனேசரிவளையுங்காணேனே

பாங்கிகள்-புலம்பல்.

விருத்தம்.

நடைகண்டாலன்னந்தோற்குநனைகர்வசந்தவல்லி
விடைகொண்டானெதிர்போர்ச்சங்கவீதியிற்சங்குந்தோற்றாள்
சடைகொண்டானுடைதான்கொண்டுதன்னுடைகொடுத்தானை
யுடைகொண்டவழக்குத்தானேயூர்கண்டதேர்கண்டாளே

இ-ம்-தோடி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

க. ஆசைகொண்டேயாரில்வீழ்ந்தான்நேசமாமென்பார்-விளை
யாடாள்பாடாள்வாடாமாலைசூடாள்சாமென்பார்
பேசொணாதோமோசமென்னமோசமோவென்பார்-சாமப்
பேயோவென்பார்பிச்சோவென்பார்மாயமோவென்பார்

உ. ஐயோவென்னசெய்வோமென்பார்தெய்வமேயென்பார்
களைப்பாச்சோவென்பார் மூச்சேதென்பார் பேச்சேதேவென் [பார்
கையிற்றிருநீறெடுப்பாரையலாமெல்லாங் குலக்
கையர்திரிகூடநாதா காணபாராமென்பார்

வசந்தவல்லியைப்-பாங்கிகளுபசரித்தல்.

விருத்தம்.

வானவர்திருக்குற்றாலர்மையலால்வசந்தவல்லி
தானுடல்சோர்ந்தாளென்றுதமனியமாடஞ்சேர்த்து
மேனியாரழகுதோற்றமின்னனார்விழுந்தப்பேணாக்
கூனைகொண்டமிழ்த்துவார்போற்குளிர்ச்சியால்வெதுப்புவாரே.

இ-ம்-கல்யாணி-சாப்புதாளம்

கண்ணிகள்.

க. முருகுசந்தனக்குழம்புபூசுவார் விரகத்தீயை
மூட்டிமூட்டிவிசிறிவீசுவார்
கருதுதேயுடலுருகுதேயென்பார்-விரித்தளிருஞ்
சரியுதேதரும்தம்பொரியுதேயென்பார்

உ. அருகிலிருந்துகலைசகண்டத்துயார்-எடுத்துமாதர்
அணைமெத்தைவாங்கிக்குருதுவிடத்துவார்
பெருமானார்க்குறம்பலாவினூர் வசந்தமோகினிப்
பெருநிலாவினென்குலாவினள்

வசந்தவல்லி-சந்திரதூஷணஞ்செய்தல்.

விருத்தம்.

பெண்ணிலேலோர்குழன்மொழிக்கோர் பங்குகொடுத்தவர் கொடுத்
தபிரமைமயாலே, மண்ணிலேமதுமயக்கமிட்டக்கினமேறலுனைக்குமதிப
யக்கந்தானே, கண்ணிலேநெருப்பைவைத்துக்காந்துவாருடன்கூடிக்
காந்துக்காந்தி, விண்ணிலேநெருப்பைவைத்தாய் தண்ணிலாக்கொடும்
பாவி வெண்ணிலாவே. (௯க

இராகம்-வராளி ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. தண்ணமுதுடன்பிறந்தாய் வெண்ணிலாவே-அந்த
தண்ணளியையேன்மறந்தாய் வெண்ணிலாவே

குற்றாலக்குறவஞ்சி.

௧ பெண்ணுடன்பிறந்ததுண்டோ வெண்ணிலாவே-என்றன்
பெண்மைகண்டுங்காயலாமோ வெண்ணிலாவே

௨. விண்ணிலேபிறந்தவர்க்கோ வெண்ணிலாவே - எரு
விட்டுநானெறிந்ததற்கோ வெண்ணிலாவே
௩ கண்ணில்விழியாதவர்போல் வெண்ணிலாவே -மெத்த
காந்தியாட்டமாடுகிறாய் வெண்ணிலாவே

௪. ஆகடியஞ்செய்தல்லவோ வெண்ணிலாவே - நீதா
னட்சடியும்போற்குறைந்தாய் வெண்ணிலாவே
௫ மோகமவர்க்கானேனென்றால் வெண்ணிலாவே - இந்த
வேகமுனக்கானதென்ன வெண்ணிலாவே

௬. நாகமென்றேயெண்ணவேண்டாம் வெண்ணிலாவே - இது
வாகுகுழற்பின்னல்கண்டாய் வெண்ணிலாவே
சோகனைகவிழ்த்தாய் வெண்ணிலாவே-திரிகூட
லிங்கர்முன்போய்க்காய்வாய் வெண்ணிலாவே

வசந்தவல்லி-மன்மததூஷணஞ்செய்தல்

விருத்தம்.

வெண்ணிலாமௌலிதந்தமையலானதையறிந்துதையலார்கள்
வெண்ணிலாப்பகையெடுத்தாரின்னகைமா நன்னகமொன்றவர்சொன்ன
மண்ணலார்திரிகூடநாதமொன்பாமொன்னைவுமமைந்திடாமோ [மோ
மெண்ணிலாக்குடைபிடித்துமீனகேதனம்பிடித்தவெண்ணிலானே

இராகம் எதுகுலகாம்போதி-தாளம்-சாப்பு

கண்ணிகள்.

௧. கைக்கரும்பென்னையணையென்னநீயென்ன மன்மதா-இந்தச்
செக்கரும்பாவிநிலாவும்போதாதோ மன்மதா
மைக்கருங்கண்ணோளிரதிகுமால்கொண்ட மன்மதா -விடை
வல்லார்கருமால்மெயாண்டபொல்லாப்பெண்மேலுண்டோ மன்மதா

௨. திக்கெல்லாந்தென்றற்புலிவந்துபாயுதே மன்மதா குயிற்
சின்னைப்பிடித்தபின்னைப்பிடியாதே மன்மதா
அக்காளெனுஞ்சகிவெட்கமலேசுவாள் மன்மதா - அவ
ளல்லாமற்றொருபொல்லாதம்பிகாண் மன்மதா

நேரிழைபாவையுமுமையும்பாரடா மன்மதா-கண்ணில்
நிற்றுணாதாமொருசத்துருவாச்சுதே மன்மதா
பேரிகையேனன்றிப்பூரிகையேன்பிள்ளாய் மன்மதா - சிறு
பெண்பிள்ளைமேற்பொருதானைப்பிள்ளையானவையோ மன்மதா

வார்சடையிதல்லதார்குழற்பின்னல்காண் மன்மதா - நெற்றி
வந்திக்கணலல்லசிந்தூரரோசையார் மன்மதா

குற்றாலக்குறவஞ்சி.

MADRAS 41

காரிப்பிள்ளாளர்தென்னாரியநாட்டினர் மன்மதா - எங்க
நன்னகர்க்குற்றாலர்தன்னைமேசெல்லுவாய் மன்மதா

பாங்கிவினவுதல்-விருத்தம்.

படியேழுடையார்திரிகூடப் பதியைமாமதனைப்பழித்தசொல்
அடியேசகியாதிருக்கையிலே யதுநான்பயின்றலாகாதோ
கொடியேமதுரம்பழுத்தொழுகுங் கொம்பேயம்பொற்குழலே
பிடியேமதுகுடிக்கொரும்பெண் பிள்ளாய்கருத்துவிள்ளாயே.

வசந்தவல்லி- பாங்கிக்குரைத்தல்.

இராகம்-கல்யாணி- சாப்புதாளம்.

கண்ணிகள்.

க. பெம்மாற்குமெய்யர்திரிகூடநாயகர்மீதில்-மெத்த
மையல்கொண்டேனந்தச்செய்தியைக்கேளாய்நீசகியே
செய்யசடையுந்திருக்கொன்றைமாலையழகு-மவர்
கையின்மழுவுமென்கண்ணைவிட்டேயகலாதே.

உ. கங்கைக்கொழுந்தணிதெய்வக்கொழுந்தைநான்கண்டு-குளிர்
திங்கட்கொழுந்தையுநதிக்கொழுந்தாக்கிக்கொண்டேனே
சங்கக்குழையாளைச்சங்கமறுகினிற்கண்டு-இரு
செங்கைக்குட்சங்குமுஞ்சிந்திமறிவிட்டேனே.

ந. மன்றற்குளழியம்புனைந்தாரைக்கண்டு-சிறு
தென்றற்குளிதினங்கொட்டக்கொட்டநொந்தேனே
குன்றச்சிலையாளர்குற்றாலநாதர்முன்போனேன்-மதன்
வென்றிச்சிலைகொண்டுமெல்லமெல்லப்பொருதானே.

ச. பெம்மானைநன்னகர்ப்பிரானைவீதியிற்கண்டு-அவர்
கைம்மானைக்கண்டுகலையைநெகிழவிட்டேனே
செம்மேனிதன்னிற்சிறுகறுப்பானதானைக்கண்டு-இன்று
அம்மாவென்மேனியடங்கலுமேகறுத்தேனே

ரு. வெள்ளிவிடையில்வியாழம்புனைந்தாரைக்கண்டு இந்த
நள்ளியதிங்களைஞாயிறுபோலக்கண்டேனே
எள்ளளவூணுமுறக்கமுமில்லாரைக்கண்டு-நானும்
எள்ளிடவூணுமுறக்கமுமற்றுவிட்டேனே.

பாங்கிபழித்தல் விருத்தம்.

தரைப்பெண்ணுக்கணிபோல்வந்ததமனிக்கொடியேமாதர்
துரைப்பெண்ணேவசந்தவல்லிசொன்னபேதைமைக்கென்சொல்வே
வரைப்பெண்ணுக்காசைபூண்டவார்சங்கமறுகிலூட
நரைத்தமாடேறுவார்க்கோநல [illegible]கொண்டாயே.

வசந்தவல்லி-[ஸ்வாமிகளைப்புகழ்ந்துகூறல்.

இராகம்-சௌராஷ்டிரம்-ரூபகதாளம்.

கண்ணிகள்

மின்னவர்குற்றாலர்செய்தியின்னமின்னங்கேளாயோமானே - அவர்
மோகனத்தின்மால்விடைக்குலோகமெல்லாமோரடிகாண்மானே.

ஸன்னிதியிற்பேறல்லவோபொன்னாலயத்தேவர்செல்வமானே- தினப
சந்திரனுஞ்சூரியனும்வந்திறங்கும்வாசல்கண்டாய்மானே. [ஏஞ்
ஞகரிலிருக்குநாளொருத்திதானொவாசைகொண்டேன்மானே
பன்னியருமாசைகொண்டார் பன்னியருமாசைகொண்டார்மானே.

தென்னிலங்கைவாழுமொருகன்னிகைவண்டோதரியாள்மானே- அவர்
பொன்னணையிற்சேர்ந்தணையவென்னதவஞ்செய்தாளோமானே.

இதுவும்-வசந்தவல்லி-பாங்கிக்குச்சொல்லுகிற.

விருத்தம்.

வாரிலேபழம்பழுத்துத்தூரிலேகுலைவெடித்துவெடித்ததீந்தேன்
ஏரிலேபாதாளகங்கைவந்தெனக்குதித்தபதிந்தேன்கங்கை
நீரிலேகுளிபெருகுங்குறும்பலாக்கோலிருக்குநிமலமூர்த்தி
பாரிலேபிரமைகொண்டபெண்களிலேநானுமொருபெண்கண்டாயே

பாங்கிசொல்லல்-விருத்தம்.

வசந்தவல்லாசவல்லியல்லிக்குவெல்லிபேசி
பசந்தம்தார்பசப்புங்கண்டால்பரமன்மேலாசைகொண்டாய்
நிசந்தருந்திருக்குற்றால நிரந்தரமூர்த்தியும்பா
விசைநடிக்கருமமேதோவிசையநீயிசைத்திடாயே.

வசந்தவல்லி-வருந்துதல்.

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

கண்ணிகள்

புரத்துநெருப்பைமூவர்க்கவித்தவர்மையல்கொண்ட என்
னொருத்திகாமநெருப்பவிக்கலார்
பருத்தமலையைக்கையிலிணக்கிலார் கொங்கையான
பருவமலையைக்கையிலிணக்கினார்.

அஞ்சுதலைக்குளாறுதலைவைத்தார் எனதுமனதினில்
அஞ்சுதலைக்குளாறுதலைவையார்
நஞ்சுபருகியமுகங்கொடுத்தவர் எனதுவாள்விழி
நஞ்சுபருகியமுகங்கொடுக்கிலார்.

தேவர்துணைதன்சாபந்தீர்த்தவர் வன்னமாங்குயிற்
சின்னத்துணைதன்சாபந்தீர்த்திலார்
யாவருட்புகழ்திருக்குற்றாலர்தாம் சகலபேர்க்கு
மிரங்குவாரெனக்கிரங்கிலார்பெண்ணே,

பாங்கிசொல்லுகிற- விருத்தம்.

தன்னகர்திருக்குற்றாலநாதர்மேலாசைபூண்டு
சொன்னவர்க்கிணங்கவார்த்தைசொல்லவும்படித்துக்கொண்டாய்
சன்னிதிவிசேஷஞ்சொல்லத்தக்கதோமிக்கதோதாய்
என்னிலானதுநான்சொன்னேனினியுனதிச்சைதானே.

வசந்தவல்லி பாங்கியைத்தூதனுப்புதல்.

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி,

தூதுநீசொல்லிவாராய்பெண்ணே- குற்றாலர்முன்போய்த்
தூதுநீசொல்லிவாராய்பெண்ணே.

அநுபல்லவி.

ஆதிநாட்சுந்தரர்க்காய்த்தூதுபோனவர்பாலே (தூதுநீ)

[சரணங்கள்.]

க. உறங்கவுறக்கமும்வாராது - மாயஞ்செய்தானை - மறந்தாலுமறக்க வுங்கூடாது - பெண்ஜனமென்று - பிறந்தாலும்பேராசையாகா து- ஆகாதென்றுநான் - அதிகஞ்சஞ்சலுகைக்காரர்க்காசையானேயி ப்போது. (தூது)

உ. நேற்றுறக்கமெல்லாங்குளிர்ந்தகாட்டி - இன்றுகொதிக்கும்- நித்திலப பாவிக்கென்னபோட்டி-நடுவேயிருக்க- காற்றுச்சுவந்தனொருசே ட்டி - விரகநோய்க்கு - மாற்றுமருந்துருகையாமருந்தவித்துன்றுபாரு காட்டி. (தூது)

ங. வந்தாலிந்நேரம்வரச்சொல்லு வாராதிருந்தால்- பாலையாகிலுந்தரச் சொல்லு-குற்றாலநாதர் தந்தாமாலையென்றுந்தருவாச்சொல்லு த ராதிருந்தால்-தாமெடுத்ததெல்லாம்பெண்ணைநாயகரொன்றுபோ லவும். (தூது)

வசந்தவல்லி பாங்கிக்குச்சந்திசமயஞ்சொல்லுதல்.

விருத்தம்.

செவ்வேளைபெற்றருள்வார்சிலைவேளைவென்றருள்வார்இரும்பத்தாமே
டவ்வேளையழைத்தருள்வாரவர்வேளையொருத்தருக்குமதியொண்ணாதா
கைபவழமுரித்தவர்க்குநாவர்கொலுவமயரு ருபகாரணற்றால் [ல்
எவ்வேளைபலவுமுணையப்பல்வேளையாம் பொலக்கேண்மின்னனே.

தரு இ ம் பியாகடை ஆதி தாளம்.

க. திரிகூடராஜருக்குத்திருவனந்தல்முதலாகத்
தினமுமொன்பதுகால் கொலுவிற்சகியே
உ. பெரிதானவபிஷேகமெழுகாலமுமொருவர்
பேசுதற்குச்சமயமல்ல கண்டாய்சகியே
ங. வருநாளிலொருமூன்றுதிருநாளும்வசந்தனு
மதவதியாருந்தவழி. திருப்புஞ்சகியே

குற்றாலக்குறவஞ்சி.

௪ ஒருநாளுக்கொருநாளில் வியனுகக்குழன்மொழிப்பெண்
ணுந்திருக்குங்கொலுவேளை கண்டாய்சகியே

௫. பெத்தரிக்கமிருந்திருக்குங்குற்றாலநாதலிங்கர்
பெருங்கொலுவிற்சமயம் மதியாமற்சகியே

௬ சித்தரொடுதேவர்கணத்துச்சிவகணங்கள்தடைசெயக்
திருவாசற்கடைநிற்பார் சிலபேர்சகியே

௭ அத்தலையிற்கடந்தவர்கள் நந்திபிரம்படிக்கொதுங்கி
ஆட்கொண்டார்குறட்டில்நிற்பார் சிலபேர்சகியே

௮. மைத்தருங்கண்மாதர்விட்டவண்டுகளுங்கிளிகளும்
வாசல்தொறுங்காத்திருக்கும் கண்டாய்சகியே

௯. கோலமறையோதியசங்கரவிசுவநாதனருள்
குற்றாலச்சிவராமநம்பி செய்யுஞ்சகியே

௰. பாலாறுநெய்யாறுயபிஷேகநைவேத்தியமும்
பணிமாறுகாலமுங் கொண்டருளிச்சகியே

௰௧. நாலுமறைப்பழம்பாட்டுமூவர்சொன்னதிருப்பாட்டு
நாலுகவிப்புலவர்புதுப் பாட்டுஞ்சகியே

௰௨. நீலகண்டர்குற்றாலர்தேவியுடன்கொலுவிருப்பார்
நீக்கமில்லையல்லார்க்கும் பொதுக்காண்சகியே

௰௩. அப்பொழுதுகுற்றாலர்தேவியுடன்கொலுவிருப்பார்
ஆசைசொல்லக்கூடாது கண்டாய்சகியே

௰௪. முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்வந்துநின்று
முயற்சிசெய்யுந்திருவநந்தற் கூடிச்சகியே

௰௫. கொப்பழகுகுழன்மடந்தைபள்ளியறைதனிலிருந்து
கோயில்புகுமேகாந்தச் சமயஞ்சகியே

௰௬. மைப்பழகுவிழியாயென்பெருமானைநீசொல்லி
மருவாமலேமாங்கிநீ வாராய்சகியே

கொச்சகம்.

தெண்ணீர்வடவருவித்தீர்த்தத்தார்செஞ்சடையே
விண்ணீர்புனைந்தார்விரகவெம்மைக்காற்றாமல்
ஒண்ணீர்நறும்புனலாய்க்கைவளையே செய்கணையாய்
உண்ணீரிற்கூடலுனைக்கிணறுசெய்வாளே.

கூடல்சிந்து.

இ-ம்-பந்துவராளி-தாளம்-திரிபுடை.

௧. பாடியமறைதேடியநாயகர்பன்னகர்பணிநன்னகர்நாயகர்
பாவலர்மனுக்காவலர்நாயகர்பகஞ்சலிபணியாளர்

௨. கோடியமதிசூடியநாயகர்குழன்மொழிபுணரழகியநாயகர்
குறும்பலாவினிற்கூடுவோராமேனிற்கூடலேநீகூடாய்

விருத்தம்.

ஆடல்வளர்வீதியிலேயங்கணர்முன்போட்டசங்கமாங்குலிட்டில்
தேடல்வளைக்குறிபோலக்கூடல்வளைத் திருந்துவல்லிதியங்குபோதில்
கூடல்வளைக்கரங்கசையமாத்திரைக்கோலேந்திமணிக்கூடைதாங்கி
மாடமறுகூடுதிரிகூடமலைக்குறவஞ்சிவருகின்றாளே.

குறத்திவருதல்-ஆசிரியப்பா.

சைவமுத்திரையைவானின்மேற்றரிக்குந்
தெய்வமுத்தலைசேர்திரிகூடமலையான்
வான்புனல்குதட்டுமடைக்குருகினுக்குத்
தேன்புனலையேறுபூஞ்சித்திரநதியான்
வரிநீர்செழிக்கவாரிநீர்கொழிக்கு
மாரிநீர்வளர்தென்னாரியநாட்டான்
கன்னிமாப்பழுத்துக்கதலிதேன்கொழித்துச்
செந்நெல்காத்தலிக்குநன்னகர்ப்பதியான்
ஓராயிரமறையோங்கியபரியான்
ஈராயிரமருப்பேந்தியயானையான்
சேவகவிருதுஜெயவிடைக்கொடியான்
மூவகைமுரசுமுழங்குமண்டபத்தான்
அண்டகோடிகளையாணையாலடக்கிக்
கொண்டல்போர்க்கவிக்குங்கொற்றவெண்குடையான்
வலசுந்தரிகுழல்வாய்மொழியருட்கண்
கோலவண்டிணங்குங்கொன்றைமாலிகையான்
பூவளர்செண்பகக்காவளர்தம்பிரான்
தேவர்கள்தம்பிரான்திருவருள்பாடி
இலகுநீறணிந்துதிலகமுமெழுதிக்
குலமணிப்பாசியுங்குன்றியும்புனைந்து
சலவைசேர்மருங்கினிற்சாத்தியகூடையும்
வலத்துகைப்பிடித்தமாத்திரைக்கோலும்
மொழிக்கொருபசப்புமுலைக்கொருகுலுக்கும்
விழிக்கொருசிமிட்டும்வெளிக்கொருபகட்டுமாய்
உருவசியரம்பைகருவமுமடங்க
ஊறவின்குறும்பால்முனிக்குறும்படங்க
சமனிக்குமுறையால்சபையெலாமடங்கக்
கமனிக்குமலனுங்கடைக்கணாலடங்கக்
கொட்டியவுடுக்குங்கோடாங்கிக்குறிமுதல்
மட்டிலாக்குறிகளுங்கட்டினாலடக்கிக்

கொங்கணமாரியங்குச்சிலர்தேசமும்
செங்கைமாத்திரைக்கோல்செங்கோல்நடாத்தி
கன்னடந்தெலுங்குகலிங்கராச்சியமுந்
தென்னவர்தமிழால்செயற்பதநாட்டி
மன்னவர்தமக்குவலக்கைநோக்கி
இன்னிசையடவார்க்கிடக்கைநோக்கி
காலமுன்போங்குறிகைப்பலனுங்குறி
மேலினிவருங்குறிவேண்டுவார்மனக்குறி
மெய்க்குறிகைக்குறிவிழிக்குறிமொழிக்குறி
யெக்குறியாயினுமிமைப்பினிலுரைக்கு
மைக்குறிவிழிக்குறவஞ்சிவந்தனளே

இதுவுமது-விருத்தம்.

சிலைநுதலிற்கஸ்தூரித்திலதமிட்டுநறுங்குழலிற்செச்சைசூடிக்
கொலைமதர்க்கண்மையெழுதிமாத்திரைக்கோல்வாங்கிமணிக்கூடைதாங்கி
முலைமுகத்திற்குன்றிமணிவடம்பூண்டுதிரிகூடமுகல்வர்சாரல்
மலைதனிற்பொன்வஞ்சிகுறவஞ்சியபரஞ்சிகொஞ்சிவருகின்றாளே.

தரு-இ-ம் தோடி-சாப்புதாளம்.

பல்லவி.

வஞ்சிவந்தனளேமலைக்குறவஞ்சிவந்தனளே

அநுபல்லவி.

ஞ்சியெழிலபரஞ்சிவரிவிழிநஞ்சமுழுமுறநெஞ்சுலவினி
ஞ்சிசடைமுடிவிஞ்சையமலனைநெஞ்சினிலணைவொடுமிஞ்சுகுறிசொல (வ)

சரணங்கள்.

வல்லிநிகர்முலையில்லையெனுமிடைவில்லையணிநுதல்முல்லைபெருநகை வெல்லியமனையொருசொல்லியிலைதனில்வல்லியவனிலும்வல்லியிவளென-ஒல்லியுடைகனடில்லிவனாபுகழ்புல்லிவருகுறிசொல்லிமதுரித நல்லிபனைமலைவல்லிகுழன்மொழிச் செல்விபுணர்பவர்கல்விமலைக்குற (வஞ்சி)

குன்றிமேமைழமின்கவெனநிரைகுன்றிவடமுலைமுங்கவே-மன்றல் கமழ்சிறுதென்றல்வரும்வழிநின்றுதாளமிலங்கவே-நன்றிலிடிய மொன்றில்மதனனுமுசலிதுலைழபொங்கவே- என்றுமெழுதியம ன்றில் நடமிடுகினநசரணினர்வென்றிடுலைக்குற (வஞ்சி)

ஆடுமிருகுழைதோடுமொருகுழற்காடுமிணைவிழிசாடவே - கோடு பொருமுலைமூடிசலவையினூடுபிதுங்கிமாலாடவே- தேடிமுதளிவ ராடுபயிரவிமோடிபெறவிசைபாடியே நீடுமலைமயிலாடு மைந்திரு டுமலைதிரிகூடமலைக்குற (வஞ்சி)

குறத்தியை வர்ணித்தல்

கொச்சகக்கலிப்பா.

முன்னக்கிரிவளைத்த முக்கணர்குற்றாலர்வெற்பில்
கன்னங்கரியகுழற்காமக்குறவஞ்சி ‖
பொன்னின்குடம்போற்புடைத்தெழுந்தபாரமுலை
யின்னம்பருத்திட்டாலிடைபொறுக்கமாட்டாதே ‖

தரு-இராகம்-தோடி ஆதிதாளம்.

பல்லவி.

வஞ்சிவந்தாள்-மலைக்குறவஞ்சிவந்தாள்

அநுபல்லவி.

வஞ்சிவந்தாள்திரிகூடரஞ்சிதமோகினிமுன்னே
மிஞ்சியவிரகநோய்க்குச்சஞ்சீவிமருந்துபோலே (வஞ்சி)

சரணங்கள்.

௧. மும்மையுலகெங்கும்வெல்லக் கொம்மைமுலையார்க்கும்நல்ல- செ
ம்மையாய்க்குறிகள்சொல்லஅம்மேயம்மேயென்றுமெல்ல (வஞ்சி

௨. சோலையில்வசந்தகாலம்வாலகோகிலம்வந்தாற்போல
கோலமலைவில்லியார்குற்றாலமலைவாழுங்குற (வஞ்சி

௩. மாத்திரைக்கோலத்துடன்னைச்சாத்திரங்கண்பார்வையன்னத்
தோத்திரவடிவமின்னபத்தமலர்க்கொடியென்ன (வஞ்சி

வசந்தவல்லிகுறத்தியைக்கண்டுமலையைவினவுதல்

ஆசிரியவிருத்தம்.

அந்தரதுந்துமிமுழங்குநன்னகர்க்குற்றாலலிங்கரருளைப்பாடி
வந்தகுறவஞ்சிதன்னைவசந்தவல்லிகண்டுமனமகிழ்ச்சிகொண்டு
சந்தமுலைத்துவளுமிடைத்துவளநகைப்பவளவிதழ்த்தையலேயுன்
சொந்தமலையெந்தமலையந்தமலைவளமெனக்குச்சொல்லென்றாளே.

குறத்திசொல்லல்

இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. வானரங்கள்கனிகொடுத்து மந்தியொடுகொஞ்சு
மந்திசிந்துகனிகளுக்கு வான்கவிகள்கெஞ்சு
௨. கானவர்கள்விழியெறிந்து வானவரையழைப்பா
கமனசித்தர்வந்துவந்து காயசித்திவிளைப்பா
௩. தேனருவித்திரையெழும்பி வானின்வழியொழுகு
செங்கதிரோன்பரிக்காலுந் தேர்க்காலும்வழுக்கு
௪. கூனலிளம்பிறைமுடித்த வேணியலங்கா
குற்றாலத்திரிகூட மலையெங்கள்மலையே

முழங்குதிரைப்புனலருவி கழங்கெனமுத்தாடும்
முற்றமெங்கும்பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண்டாடும்
கிழங்குகிள்ளித்தேனெடுத்து வளம்பாடிநடிப்போம்
கிம்புரியின்கொம்பொடித்து வெம்புதினையிடிப்போம்
செழுங்குரங்குதேமாவின் பழங்களைப்பந்தடிக்கும்
தேனலர்சண்பகவாசம் வானுலகம்வெடிக்கும்
வழங்குகொடைமகராஜர் குறும்பலவிலீசர்
வளம்பெருகுந்திரிகூட மலையெங்கள்மலையே

ஆடுமரவீனுமணி கோடிவெயிலெதிக்கும்
ஆம்புலியைக்கவளமென்று தும்பிவழிமறிக்கும்
வேடுவர்கள்தினைவிளைக்கச் சாடுபுனந்தோறும்
விந்தையகில்குங்குமமுஞ் சந்தனமும்நாறும்
௫. காடுதொறுமோடிவரை யாடுகுதிபாயும்
காகமணுகாமலையில் மேகநிரைசாயும்
௬. நீடுபலாவீசர்கயி லாசகிரிவாசர்
நிலைதங்குந்திரிகூட மலையெங்கள்மலையே

௧. கயிலையெனும்வடமலைக்குத் தெற்குமலையம்மே
கனகமகமேருவென நிற்குமலையம்மே
௨. சயிலமலைதென்மலைக்கு வடக்குமலையம்மே
சகலமலையுந்தனக்குள் ளடக்கமலையம்மே
௩. வயிரமுடன்மாணிக்கம் விளையுமலையம்மே
வானிரவிமுழைகள்தொறு நுழையுமலையம்மே
௪. துயிலுமவர்விழிப்பாகி யகிலமெங்குந்தேடும்
அங்கள்திரிகூடமலை யெங்கள்மலையம்மே
௫. கொல்லிமலையெனக்கிளைய செல்லிமலையம்மே
கொழுநனுக்குக்காணிமலை பழனிமலையம்மே
௬. எல்லுலவும்விந்தைமலை யெந்தைமலையம்மே
இமையமலையென்னுடைய தமயன்மலையம்மே
௭. சொல்லரியசாமிமலை மாமிமலையம்மே
தோழிமலைநாஞ்சினாட்டு வேழ்விமலையம்மே
௮. செல்லினங்கள்முழவுகொட்ட மயிலினங்களாடும்
திரிகூடமலையெங்கள் செல்வர்மலையம்மே

௧. ஒருகுலத்திற்பெண்கள்கொடோம் ஒருகுலத்திற்கொள்ளோம்
உறவுபிடித்தாலும்விடோம் குறவர்குலம்நாங்கள்
௨. வெருவிவரும்கிளைப்புனத்திற் பெருமிருகம்விலக்கி
வேங்கையாய்வெயில்மறைத்த பாங்குதனைக்குறித்தே
௩. அருளிலஞ்சிவேலர்தமக் கொருபெண்ணைக்கொடுத்தோம்
ஆனதனால்மலையெல்லாஞ் சீதனமாய்க்கொடுத்தோம்

௨௪. பரிதிசூழுமலையைத் திருவனுக்குக்கொடுத்தோர்
பாரமர்திரிகூடமலை பழயமலையம்மே

வசந்தவல்லிகுறத்தியை-நாட்டுவளமும்-நகர்வளமும் வினவுதல்

விருத்தம்.

கோட்டுவளமுலைகாட்டுங்கொடியின்வளமிடைகாட்டுமகுறிஞ்சிப்பூத்த
காட்டுவளங்குழல்காட்டுமலைவளந்தானியுனைத்துக்காட்டுவானேன்
தோட்டுவளப்புரிகாதர்திரிகூடமலைவளருந்தோகையேயுன்
னாட்டுவளமெனக்குரைத்துக்குற்றாலத்தலவளமுநவிலுவாயே.

குறத்திசொல்லுதல்.

இராகம்-கேதாரகௌளம்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

௧. கூரமாங்குயிற்சின்னங்காமத்துரைவந்தானுரைவந்தானென்றூத ஆரமாமுலைமின்னாரவரவர்க்குற்றோர்களலங்காரஞ்செய்யப் பாரமாமதிவெண்குடைமிஞ்சப் பறக்குங்கிள்ளைப்பரிகள்மின்கொஞ்சத், தேரின்மாரன்வசந்தனுலாவுந்திருக்குற்றாலர்தென்னாரியநாடே.

௨. காரைச்சேர்த்தகுழலார்க்குநாணிக்கடலைச்சேர்ந்தகறுப்பானமேகம், சேர்ந்தமுலைக்கிணையாகுமலையைச்சேர்ந்துசிலையொன்றுவாங்கி, நீரைச்சேர்ந்தமழைத்தாரையம்பொடுநிலக்கொண்டவின் தேரோதி வெய்யோன், தேரைச்சூழ்ந்திடக்கார்காலம்வெல்லுந்திருக்குற்றாலர்தென்னாரியநாடே.

௩. சூழம்மதியிறங்குந்துறையிற்சொரியும்பாலைப்பருகியவாளைகள் கூழைவாசப்பலாவினிற்பாயக்கொழும்பலாக்கனிவாழையிற்சாய வாழைசாய்ந்தொரு தாழையிற்றுங்க வருவிருந்துக் குபசரிப்பார் போல, தாழைசோறிடவாழைகுருத்திடுஞ் சந்தி சூடர்தென்னாரிய நாடே.

௪. அன்னலார்மொழிதன்னைப்பழித்ததென்றுடவர்மண்ணின் முறிக்குங் கரும்பு, அன்னிமீளவளர்ந்துமடந்தையர்தோளைவென்றதுகூடர்முத்தமின்று,பின்னுமங்கவர்மூரலைவென்றுபிரியுங்காலத்தற்பெண்மையைவெல்ல, கன்னல்வேளுக்குவில்லாக வோங்குங்கடவுளாரிய நாடெங்கணாடே.

௫. தக்கபூமிக்குமுன்புள்ளநாடுசகலதேவர்க்குமன்புள்ளநாடு
முக்கண்ணன்விளையாடியநாடுமுதியநான்மறைபாடியநாடு
திக்கெல்லாம்வளர்ந்தோங்கியநாடுசிவத்துரோகமுநீங்கியநாடு, மைக்கண்ணுள்குழல்வாய்மொருபாகர் வசந்தவாரியநாடெங்கணாடே.

௬. அஞ்சுநூறுமகங்கண்டநாடுஅநேகங்கோடியுகங்கொண்டநாடு
கஞ்சயோனியுதிக்கின்றநாடுகமலவாணிதுதிக்கின்றநாடு
செஞ்சொன்மாமுனியேகியநாடுசெங்கண்மால்சிவனாகியநாடு
வஞ்சிபாகர்திரிகூடநாதர்வசந்தவாரியநாடெங்கணாடே

௮ மாதமூன்றுமழையுள்ளநாடு வருஷமூன்றுவிளைவுள்ளநாடு வேதமூன்றும்பலாவுள்ளநாடு விசேஷமூன்றுங்குலாவுள்ளநாடு போகமூன்றுநலஞ்செய்யுநாடு புவனமூன்றுவலஞ்செய்யநாடு நாதமூன்றுருவானவர்குற்றாலர்நாதராரியநாடெங்கணாடே.

௯. தீங்கக்காண்பதுசேர்ந்தவர்பாவம் நெருங்கக்காண்பதுகன்னலிற்செந்நெல், தூங்கக்காண்பதுமாம்பழக்கொத்து சுழலக்காண்பதுதீந்தயிர்மத்து, வீங்கக்காண்பதுமங்கையர்கொங்கை வெடிக்கக்காண்பது கொல்லையின்முல்லை, ஏங்கக்காண்பது மங்கலபேரிகை யீசாரியநாடெங்கணாடே.

௰. ஓடக்காண்பதுபூம்புனல்வெள்ளம் ஒடுங்கக்காண்பதுயோகியருள்ளம், வாடக்காண்பதுமின்னார்மருங்குல் வருந்தக்காண்பதுசூலுளைச்சங்கு, போடக்காண்பது பூமியில்வித்து புலம்பக்காண்பதுகிண்கிணிக்கொத்து, தேடக்காண்பதுநல்லறங்கீர்த்தி திருக்குற்றாலர்தென்னாரியநாடே.

குறத்தி-தலமகிமைசொல்லுதல்.

விருத்தம்.

அரிகூடவயன்கூடமறைகூடத்தினந்தேடவரிதாய்நின்ற
திரிகூடப்பதியிருக்குந்திருநாட்டுவளமுமைக்கத்தெவிட்டாதம்மே
கரிகூடப்பிடிதிரியுஞ்சாரலிலேயொருவேடன்கையிலேந்தி
நரிகூடக்கைக்கிலைசென்றதிரிகூடத்தலமகிமைநவிலக்கேளே.

இராகம்-பைரவி-தாளம்-ஜம்பை

கண்ணிகள்.

க. ஞானிகளுமறியார்கள்சித்ரநதிமூல
நானறிந்தவகைசிறிதுசொல்லக்கேளம்மே
மேன்மைபெறுந்திரிகூடத்தேனருவித்துறைக்கே
மேவுமொருசிவலிங்கத்தேவரகசியமாய்
ஆனதுளையயனுமரித்தானுமறியாமல்
அருந்தவத்துக்காய்த்தேடித்திரிந்தலையுங்காலம்
மோனவானவர்க்கெங்கள்கானவர்கள்காட்டு
மூதுகங்கையாறுசிவமதுகங்கையாறே.

௨. சிவமதுகங்கையின்மகிமைபுவனமெங்கும்புகழும்
செண்பகாடவித்துறையின்பண்புசொலக்கேளாய்
தவமுனிவர்கூட்டமுமவரிருக்குங்குகையுஞ்
சஞ்சீவிமுதலானவிஞ்சைமூலிகையும்
கவனசித்தாதியருமௌனயோகியருஞ்
சார்ந்திருக்குங்கயிலாயமேற்றிருக்குமம்மே
நவநிதியும்விளையுமிடமவிடமதுகடந்தால்
நங்கைமார்குரவையொலிபொங்குநாட்டிலே.

௩. பொங்குகடல்திரிவேணிசங்கமெனச்செழிக்கும்
பொருந்துசித்ரநதித்துறையிற் பொன்னூறுமுத்தான்கொழி
கங்கையெனும்வடவருவிகங்குலிந்திரசாபம [க்கும்
கலந்தாடக்கழிநீராய்த்தொலைந்தோடும்பாவம்
சங்கவீதியிற்பரந்துசங்கினங்களேயும்
தழைத்தமதியிற்சிகரமெங்குங்கொழுக்கசயம்பாயும்
கொங்கலர்செண்பகசோலைக்குறும்பலாவீசர்
குற்றாலத்திரிகூடத்தலமெங்கள்தலமே.

௪. மன்னுதனில்தெய்வமுராசென்றுமேன்மூழ்க்கும்
வளமைபெறுஞ்சதுராயுகப்பழமையெனவுரைக்கும்
நின்றபடிதசரிபூசையன்றுஞ்செய்ந்தலமே
நிந்தனைசெய்புட்பதந்தன்வந்தனைசெய்தலமே
பன்றியொடுவேடன்கூடஞ்சென்றநிந்தத்தலமே
பற்றுகப்பாயருணைகுற்றாலத்தலமே
வென்றிபெறுந்தேவர்களுங்குன்றுமாய்மரமாய்
மிருகமதாய்த்தவமிருக்கும்பெரியதலமாமே.

வசந்தவல்லி கிளிவினவுதல்.

விருத்தம்.

தீர்த்தவிசேடமுந்தலத்தின்சிறந்தவிசேடமுமுரைத்தாய்திருக்குற்றால
மூர்த்திவிசேடந்தனையுமொழிந்தோருநீயுரைத்தாயுனைமுடன்
வார்த்தைதவிசேடமென்சற்றுவயுரைவஞ்சிக்கொடியேவருமனவாசகீர்-
த்திவிசேடமும்பெரியகிளிவிசேடந்தனையுநீகிளத்துவாயே.

குறத்தி-சொல்லுதல்.

இராகம்-முகாரி-ஏகதாளம்-

கண்ணிகள்.

௧. குற்றாலக்கிளைகளத்தைக்கூறக்கேளம்மே
குலப்பாரிக்கில்தேவரிலும்பெரியகுலங்கண்டாய்
பெரியதாய்தந்தைதனையுற்றுநீகேட்கில்
பெண்கொடுத்தமலைராசன்றனைக்கேட்கவேண்டும்
உற்றதொருபனிமலையின்கொற்றவேந்தனுக்கும்
உயர்மதுரைமாறனுக்குஞ்செயமருகர்கண்டாய்
வெற்றிபெறும்பாற்கடலிற்புற்றரவினுறங்கும்
வித்தகர்க்குக்கண்ணனைமைத்துனர்காணம்மே.

௨. ஆனைவாகனத்தானைவானுலகிலிருந்தும்
ஆடுவாகனத்தார்க்குந்தோகைவாகனர்க்கும்
தானையாற்றந்தைகாலெரிந்தமகனார்க்குந
தருகாழிமகனார்க்குந்தகப்பனார்கண்டாய்
சேனைமகடதிவாசலானைப்பெருமைபடிக்குந்
தேனீர்ப்பறைச்சாரலம் ஊர்ப்றகொடிக்குங்

காணமலர்மேலிருக்குமோனவயனார்க்குங்
காமனார்தபக்குமிவர்மாமனாரம்மே.
௩. பொன்னுலகிற்றேவருக்குமன்னுலகத்தவர்க்கும்
பூதலத்தின்முனிவருக்கும்பாதலத்துள்ளார்க்கும்
அன்னவடிவெடுத்தவர்க்குமேனவுருவார்க்கும்
அல்லார்க்குமுன்னுதித்தசெல்வர்காணம்மே
முன்னுதித்துவந்தவரைத்தமயனெனவுரைப்பார்
மொழிந்தாலுமொழியெலாம்பழுதிலைகாணம்மே
நன்னகரிற்குற்றாலநாதர்கிளைவளத்தை
நானுரைப்பதரிதுலகுதானுரைக்குமம்மே.

வசந்தவல்லி வினவுதல்.

விருத்தம்.

நீர்வளர்பவளமேனிநிமலர்குற்றாலநாதர்
ஊர்வளம்பாடியாடுங்குறவஞ்சிக்கொடியேகேளாய்
கார்வளர்குழலார்க்கெல்லாங்கருதிநீவிருதாய்ச்சொல்லும்
சீர்வளர்குறியின்மார்க்கந்தெரியவேசெப்புவாயே.

குறத்தி-சொல்லுதல்.

தரு-இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி,

வித்தார-மென்குறியம்மே-மணி

அநுபல்லவி.

முத்தாரம்பூணுமுகிழ்முலைப்-பெண்ணே.
வித்தாரமென்குறியம்மே.

[சரணங்கள்.]

௧, வஞ்சிமலையாளி கொச்சி கொங்கு
மக்கராடந்துளுக்காண மெச்சி
செஞ்சிவடகாசி நீளம் சிவனஞ்
சிங்களமீழங்கொழும்பு வங்காளம்
தஞ்சைசிராப்பள்ளிக் கோட்டை தமிழ்ச்
சங்கமதுரைதென்மங்கலப் - பேட்டை
மிஞ்சிகுறிசொல்லிப் பேராய் இசை
வென்றுதான்பெற்றவிருதுகள்-பாராய் (வித்தார)
௨. நன்னகர்க்குற்றாலந் தன்னில் எங்கும்
நட்டுமெண்ணூற்றெண்பத்தேழாண்டுதன்னில்
பன்னகமாமுனி போற்றத் தமிழ்ப்
பாண்டியனார்முதற்சிற்றேடுமேயந்த
தென்னாருஞ்சிகர சபையை எங்கள்
சின்னணஞ்சாத்தேவன்செப்பேடீந்து

முன்னாளிலேகுறி சொல்லிப் பெற்ற
மோகனமாலைதார்மோகன வல்லி (வித்தார)

௩. அன்பாய்வடகுண பாலில் கொல்லத்தி
தாண்டொருநூற்றிருபத்து நாலில்
தென்காசியாலய மோங்கக் குறி
செண்பகமாறர்க்குச்சொன்னபேர்நாங்கள்
நன்பாண்டியராச்சிய மூய்ய சொக்க
நாயகர்வந்துமணக்கோலஞ் செய்ய
இன்பமதுரைமீ னாட்சி
பெண்களைக்கேட்டதுஞ்சங்கத்தார் சாட்சி (வித்தார)

வசந்தவல்லி- குறிகேட்குதல்

விருத்தம்.

கலவிக்குவிழிவாள் கொண்டுகாமனைச்சிங்கிகொள்வாய்
குலவித்தைகுறியேயானாற்குறவஞ்சிகுறைவைப்பாயோ
பலவுக்குள் கனியாய்நின்றபரமர்குற்றாலநாட்டில்
இலவுக்குஞ்சிவந்தவாயாளெனக்கொருகுறிசொல்வாயே.

குறத்தி- சொல்லல்.

இ-ம்- அடாணா-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. என்னகுறியாகிலுநான்சொல்லுவே னம்மே - சது
ரோடுவேனெதிர்த்தபேரைவெல்லுவே னம்மே

உ. மன்னியர்கள்மெச்சுகுறவஞ்சிநா னம்மே என்றன்
வயிற்றுக்கிந்தசனைபோகச்சொல்லிவா ரம்மே

௩. பின்னமன்றிக்கூழெனினுங்கொண்டுவா வம்மே- வந்தால்
பெரியகுறிக்கைமட்டமண்டுவே னம்மே

௪. தின்னவிலையும்பிளவுமள்ளித்தா வம்மே - கப்பல்
சீனச்சரக்குந்துகையையள்ளித்தா வம்மே

௫. அம்மையம்மேசொல்லவாராய்வெள்ளச்சியம்மே யம்மே - உனக்
காக்கம்வருகுதுபாராய்வெள்ளச்சி யம்மே

௬. விம்முமுலைக்கன்னிசொன்னபேச்சுநன் றம்மே - நேரே
மேல்புறத்திலாந்தையிட்டவீச்சுநன் றம்மே

௭. தும்மலுங்காகமுமிடஞ்சொல்லுதே யம்மே - சரம்
சூட்சமாகப்பூரணத்தைவெல்லுதே யம்மே

அ. செம்மையிதுநன்னிமித்தங்கண்டபோ ரம்மே - திரி
கூடமலைநாதர்வருமணக்குண்டபோ ரம்மே

இதுவும்-குறத்திசொல்லுதல்.

விருத்தம்.

பல்லியும்பலபலவென்னப்பகருதுதிரிகூடத்திற்
கல்விமான்சிவப்பின்மிக்கான்கருத்தின்மேன்மறுவுமுள்ளான்
நல்லமேன்குலத்தானிந்தநன்னெர்க்கிலத்தானுக
வல்லியேயுனக்குநல்லமாட்பிள்ளைவருவானம்மே.

இதுவும் - குறத்திசொல்லுவது

ஸ்ரீராகம்- அடதாளசாப்பு

கண்ணிகள்.

௧. சாமெழுகுகோலமிட்டுமுறைமையாகவேகணபதியைவையம்மே - குடந்
தாங்கா முப்பழம்படைப்பாய்தேங்காயுமுடைத்துவைப்பாயம்மே,
௨. அறுகுபுனல்விளக்கிவாயடைக்காய்வெள்ளிலைகொண்டுவாவம்மே
வடை-அப்பமவல்வர்க்கவகைசர்க்கரையோடுபொரியைவையம்மே
௩. திசைநாழியளந்துவைப்பாயிறையோனைக்கரங்குவிப்பாயம்மே
குறிதிலவாதனைத்தேர்ந்துகொள்வாய்குலதெய்வத்தைத்தேர்ந்துகொள்வாயம்மே.
௪. குறிசொல்லவாகுறிசொல்லவாபிறைநுதலேகுறிசொல்லவாவம்மே
ஐயர் - குறும்பலவர்திருவருள்தாறம்பெரும்பலனுங்குறிசொல்லவாவம்மே.

குறத்திசொல்லுதல்

கட்டளைக்கலித்துறை.

ஆனேறுசெல்வர்திரிகூடநாதமனநாயகம்
மானேவசத்தப்பசுங்கொடியேவநதமவளைதஞ்சே
தானேயிருந்தநலமுநன்றேசெழுந்தாமரைப்போற்
கானேறுசைம்மலர்காட்டாய்மனசுகுறிகாட்டுதற்கே.

இ-டீ-கல்யாணி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

௧. மூத்திரைமோதிரமிட்டகையைக்காட்டாயம்மே
முன்கைமுதாரியிட்டகையைக்காட்டாய்
௨. அத்தகடகம்புனைந்த கையைக்காட்டாய்-பொன்னி
லலங்காரம்நவரியிட்டகையைக்காட்டாய்
௩. சித்திரகுடகமிட்டகையைக்காட்டாய்-பசுஞ்
செங்கைமலர்ச்சங்கரோகைக்கையைக்காட்டாய்
௪. சத்திபீடத்திறையவர்நன்னகர்க்குள்ளே-வந்த
சஞ்சீவியேபுனலுகையைக்காட்டாய்

கொச்சகக்கலிப்பா.

ஏழைபங்கர்செங்கைமழுவேந்தவர்குற்றாலர்வெற்பில்
வாழிகொண்டமோகவசந்தவல்லிகைபார்த்து
வீழிகொண்டசெங்கனிவாய்மிக்ககுறவஞ்சிபழங்
கூடையுண்டுவாயாற்குறியைவிண்டுசொல்வாளே.

குறத்திசொல்லுதல்

இ-ம்-பைரவி-ரூபகதாளம்

கண்ணிகள்.

க. மாறாமலிருநிலத்தி — லறம்வளர்க்குங்கையே
மனையறத்தாலறம்பெருக்கித் — திறம்வளர்க்குங்கையே

உ. வீறாகதவநிதியம் — விளையுமிந்தக்கையே
மேன்மேலும்பாலமுத — மனையுமிந்தக்கையே

ந. ஆறுதசனங்கள்பதி — யாற்றுமிந்தக்கையே
அணங்கனையார்வணங்கிநிதம் — போற்றுமிந்தக்கையே

ச. பேறுதருநன்னகரங் — காக்குமிந்தக்கையே
பிறவாதநெறிபார்க்கி — லேற்குமிந்தக்கையே

குறத்திதெய்வம்பரவல்

விருத்தம்.

கைக்குறிபார்க்கிலிந்தக்கைப்பிடிப்பவர்தாமெட்டுத்
திக்குமுடையாராவர்ஜெகமகாசிறீயே
இக்குறிபொய்யாதென்றேயிறையவர்திரிகூடத்தில்
மெய்க்குறவஞ்சிதெய்வம்வியப்புறவணங்குவாளே

ஆசிரியப்பா.

குழல்மொழியிடத்தார்குறும்பலாவுடையார்
அழகுசந்நிதிவாழம்பலவிநாயகர்
செந்தில்வாழ்முருகாசெங்கண்மால்மருகா
கந்தனையிலஞ்சிக்கடவுளேசரணம்
புள்ளிமானீன்றபூவையேகுறக்குல
வள்ளிநாயகியேவந்தெனக்குதவாய்
அப்பனைமேலவாசலிலரசே
செப்பருமலைமேற்றெய்வகன்னியர்காள்
ஆரியங்காவரவருட்சொரிமுத்தே
நேரியகுளத்தூர்நின்றசேவகனே
சோலமாராளிகுற்றாலநங்காய்
காலவைரவாகனதடிகறப்பா
முன்னடிமுருகாவன்னியராயா
மன்னியபுலிபோல்வருப்பன்றிராடா
எக்கலாதேவிதுர்க்கைபிடாரி
மிக்கதோர்குதியாய்வேண்டினனுங்களை
வந்தமுன்னிருந்தவசந்தமோகினிப்பெண்
சிந்தையில்நினைக்கதசிவமேளகாதவோ
சலவையோபட்டோசவசதானியமோ
கலவையோர்புழுகோகாசளபகஸ்தூரியோ

வட்டிலோசெம்போவயிரமுத்தோ
கட்டிலோமெத்தையோகட்டிவிராகனோ
வைப்பொடுசெப்போவாக்கொடுசெலவா
கைப்படுதிரவியங்களவுபோனதுவோ
மறுவிலாப்பெண்மயல்வருந்திருஷ்டிதோஷமோ
திரிகண்ணரானவர்செய்தசமடக்கமோ
மன்னர்காரியவள்மேலைமயல்சொல்லிவிட்டதோ
கன்னிகாவொருவர்மேற்காசித்தகுறியோ
சேலையுவளையுந்தெருநின்றியக்கமோ
மலையுமனையுமவாப்பெறுங்குறியோ
இத்தனைக்குறிகளிலெக்குறியினமைவாய்
வைத்ததோர்குறியவதைக்கருள்வீரோ.

குறத்திசொல்-விருத்தம்.

கடித்திடுமரவப்பூண்டகருத்தர்திருக்குற்றாலர்நேயம்
பிடிக்குதுகருத்துநன்றாய்ப்பகருசக்கதேவி
துடிக்குதென்றுசகுநாயுஞ்சொல்லுகொம்பெனவாயில்
இடிக்குதுகுறமியம்மேயிலிருப்பிச்சொல்லக்கேளே.

குறத்திசொல்லுதல்

இ-ம் பிலஹரி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

௧. சொல்லக்கேளாய்குறிசொல்லக்கேளா-யம்மே
தோகையர்க்கரசேகுறிசொல்லக்கேளாய்
௨. முல்லைப்பூவகுழலாளேநன்னகரில்வாழ்-முத்து
மோகனப்பசுங்கிளியேசொல்லக்கேளாய்
௩. பல்லக்கேறுந்தெருவிலானைநடத்தி மணிப்
பணியாபரணம்பூண்டபார்த்திபன்வந்தான்
௪. செல்வப்பூங்கோதையேநீபந்தடிக்கை-யிலவன்
சேனைகண்டவெருட்சிபோல்காணுதேயம்மே

வசந்தவல்லி சொல்லுதல்.

இராகம்-பந்துவராளி-தாளம்-திரிபுடை.

கண்ணிகள்.

௧. நன்றுநன்றுகுறவஞ்சிநாடகக்காரி-இந்த
நாட்டணைபேர்க்கானவார்த்தைநானறியேனே
௨. ஒன்றுபோடாதேகுறிசொல்லியேவந்தாய்-பின்னை
யழப்பிப்போட்டாய்குறியுங்குழப்பிப்போட்டாய்
௩. மன்றில்வருஞ்சேனைதன்னைக்கண்டுபயந்தால்-இந்த
மையலுங்கிறுகிறுப்புந்தையலார்க்குண்டோ

௪. இன்றுவனாயேகுளிருங்காய்ச்சலுமுண்டோ பின்னை
யெந்தவகையென்றுகுறிகண்டுசொல்லடி.

குறத்திசொல்லுதல்.

கண்ணிகள்.

௧. வானத்திலேதிவருட்டியோகபுருஷன் அவன்
வங்காரப்பவனியாசைகொண்டிருக்குள்ளோ

௨. தோகைநீயவனைக்கண்டுமோகித்தாயம்மே-அது
சொல்லப்படயநமதேனிருந்தேன்சொல்லுவேன்முன்னே

௩. காமனுக்காதந்திரிகூடமலைக்கேயுன்மேல்
காய்ச்சலல்லகாய்ச்சலல்லகாமக்காய்ச்சல்காண்

௪. மோகினியேயுன்னுடற்றிலுகிறப்பெல்லாம்-அதன்
மோகக்கிறுகிறுப்பேபடிமோகனக்கள்ளி.

வசந்தவல்லி-சொல்லுதல்.

கண்ணிகள்.

௧. கன்னியென்றுநானிருக்கநன்னகர்க்குள்ளே-என்னைக்
காமியென்றாய்குறவஞ்சிவாய்மதியாமல்

௨. கன்னேயாகச்சொன்னகுறிசாதிப்பாயானால் அவன்
பேருஞ்சொல்லிப்பேருஞ்சொல்லியூருஞ்சொல்லடி.

குறத்திசொல்லுதல்.

கண்ணிகள்

௧. உன்னைப்போலெனக்கவனைத்திமுகமோ-அவன்
ஊரும்பேருஞ்சொல்லுவதுந்திமுகமோ

௨. பின்னையுந்தானுனக்காகச்சொல்லுவனம்மே-அவன்
பெண்சேரவல்லவன்காண்பெண்ணரசே.

வசந்தவல்லி-சொல்லுதல்.

கண்ணிகள்.

௧. வண்மையோவாய்மதமோவித்தைதமதமோ-என்முன்
மதியாமல்பெண்சேரவல்லவனென்றாய்

௨. கண்மயக்கால்மயங்காதேயுண்மைசொல்லடி-பெருங்
கானமலைக்குறவஞ்சிக்கள்ளமயிலி

குறத்திசொல்லுதல்.

கண்ணிகள்

௧. பெண்ணரசேபெண்ணென்றால்திரியுமோக்கு-ஒரு
பெண்ணுடனேசேரவென்றால்கூடவுமோக்கு

௨. இன்னமொருவல்லவாறு நான்றானுமொக்கு-பேறைத்
திரிகூடநாதரென்றே செப்பலாமம்மே.

கவிகூற்று.

மன்னர் திரிகூடநாதரென் றாற்போதிலே-முகம்
மாணிக்கவசந்தவல்லி நாணிக்கவிழ்ந்தாள்.

குறத்தி சொல்லுதல்.

கண்ணிகள்.

௧. தன்னைக்கரிசனமாய்ப் பெண்மேவவே வல்லார்-இந்த
நாணமெல்லாம் நானோ நானும் காணவே போறேன்

௨. ஊடிநொடிபிறந்தபான் வீதியிமாலைவருங்கா-ணியிற்
கம்பத்திலிருக்குறாயும் வெட்கத்தை யம்மே

௩. என்றுமொருகுறவஞ்சி தன்னையழைத்தே
இட்டதிருவாபரணம் பூட்டினாளே.

சிங்கன் வருதல்.

விருத்தம்.

பாமாலைத்திரிகூடப்பரமரருள் பெறும்வசந்தப்பாவைகூந்தற்
பூமாலைசரிந்துவிழ அவள்மாலையணிமாலைபொலிவாய்ப்பூண்டு
நாமாலைக்குறவஞ்சி நகர்பட்டணமுழுதும் நடக்குநாளில்
மாமாலைச்சிங்கனெனுஞ் சிங்கியைத்தேடிவருகின்றானே.

இதுவுமது விருத்தம்-

வக்காவின் மணிப்பூண்டு கொய்சிறகு சிலைகழுத்துக் கவிதித் தோற்கச்சை
தொக்காலேந்திநாக்கிற தொடர்புலியையண்டுறக்கித் தூணிதூக்கிக்
கைக்காலேவாய்ப்பாயுறன்பொன்டுசிலவிக்கோலெடுத்துக் கச்சணியணிசேர்ந்து
த்திக்கடையகத்துறுயசிக்க குற்றாலத்திரிகூடச்சிங்கன்வந்தான்.

இதுவுமது- விருத்தம்.

வக்காவின்பானீருடயலைக்கூரிசிங்கிவரும்வழியைத்தேடி
மிககானடிப்பிடித்தெகிட்டமுடுநடுபகவெதிததுநோக்கிக்
கக்காணவெனவுமுங்கிவருவிக்காக குக்கேற்றகண்ணிகையில்கை
தொக்காகதடைகடந்துதிரிகூடமலைக்குறவன்றோன்றினனே. ராங்கி

ராகம்-அடாணா சாப்புதாளம்.

கண்ணிகள்.

கொக்கிறகுகுடிக்கொண்டுகுருவிபெட்டையடிக்கொண்டு
வக்காவின்மணிபூட்டிக்கொண்டுமடவார்கண்போலிட்டுக்கொண்டு

தொக்காய்க்கச்சைபிறக்கிக்கொண்டு தூர்த்தாயுசைச் சுறுக்கிக்கொண்டு. திக்கட்டுங்காக்குறவன் திரிகூடசிங்கன் வந்தான்.

சிங்கன்சொல்லுகை.

விருத்தம்.

ஆளிபோற்பாய்ந்துசெருப்பிசைகேட்குமுதிரிகூடத்தமலர்நாட்டில்
வேளைதொறும்புகுந் திருவிளையாட்டங்காணிசூதிவேட்டைப்பாடி
ஞாளிபோற்சுவடெடுத்துப்புனைபோலொளிபோலடுத்துப்போறுப்பயப்புலிக்
கூளிபோற்றொடர்ந்தடிக்குந்திரிகூடசிங்கக்குறவன்றானே.

இராகம் தனியாசி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. தேவருக்கரியார்மூவருக்குமெட்டார் - சித்திரசபையார் சித்திரநதியும் கோவிலிருப்பார்வில்காவலிடங்க குறவர்சடைச்சிறுங்குறவன்றானே.

௨. காதலஞ்செழுத்தாம் ... கந்தரவெடியிற்றுக்கிளை ளைநிலைமாடுத்துப்பாதகர்மதாலைப்பறையலை ... புறவையடிப்ப டிக்குங்குறவன்றானே.

௩. தனிதனிமுழை ... பலவிலிருங்குறவர் கூசையினைமணர்க்காரிகைத ளைபிடித்தே படைமிர்ப்பசலிசிகண்ணியிட்டுப் - பறவைகளியடி க்குங்குறவன்றானே.

௪. ஒருதுறைமுச்சங்கம் ... திரிகூடநாத ர் திருநாமம்பேர் ... குறவன் றானே.

நூவன்வருதல் விருத்தம்

புலிபொருபுலியைத்தாக்கிப்போர்மதயானைச்சாய்க்கும்
வலியவர்திரிகூடத்தில்மதப்புலிச்சிங்கன்முன்னே
கலிகளுக்கடையுமேசிக்கைகயிலேயொட்டிவாங்கி
எலிகளைத்தாக்கும்வீரனிப்புலிநூவன்வந்தான்.

இராகம்-ஆடாணா- சாப்புதாளம்.

கண்ணிகள்.

௧. ஊர்க்குருவிக்குக்கண்ணியுங்கொண்டு உள்ளான் ... மண்ணி க்கொண்டு, பார்க்கமெல்லாம்பலபேசிக்கொண்டு கோட்டான நூவனு ம்வந்தானே.

௨. கருங்குருவிக்குக்கண்ணியுங்கொண்டு ... கோற்றிக்கம்பொரியும் கொண்டு, வரிச்சிலங்குருவிற்கவுடைய ... நூவனும்வந் தானே.

௩. ... கண்ணி - ... மிட்டானை போல்க்கொண்டு ... வந்தானே.

௪. கொட்டைகைத்தூண்போலக்காலிலங்க-ஒட்டகம்போலேமேலில ங்கக்கட்டானதிரிகூடச்சிங்கன்-மட்டிவாய்நூவனுந்தானே.

சிங்கன்-பட்சிகளைப்பார்த்தல்.

விருத்தம்.

முவலைகமதிலுஞ்சாயலூரலால்வீரஞ்செய்த
சேவகர்திருக்குற்றாலர்தருவிளையாட்டந்தன்னில்
பாவகமாகநூவன்பறவைபோற்பறவைகூவி
மாவின்மேலேறிச்சிங்கன்வரும்பக்ஷிபார்க்கின்றானே.

தரு-இராகம்-கல்யாணி-ஆதாளம்.

பல்லவி.

வருகினுமையே-பறவைகள் வருகினுமையே.

அநுபல்லவி.

வருகினுமையேதிரிகூடநாயகர்
வாட்டமில்லாப்பண்ணைப்பாட்டப்புரவெல்லாம்
குருகுநாரையுமன்னமுந்தாராவும
கூழைக்கிடாக்களுஞ்செங்கால்நாரையும். (வருகினு)

சரணங்கள்.

௧. சென்னியிலேபுனற்கன்னியைவைத்த
திரிகூடநாதர்கிரிமாதுவேட்கையில்
மன்னனொருவன்வரிசையிட்டான்கங்கை
மங்கைக்குநானும்வரிசைசெய்வேனென
அன்னசயாவுடையாகாசகங்கை
படிக்களைக்காணப்புறப்படுநேத்திபோல்
பொன்னிறவானெங்குந்தன்னிறமாகப்
புரிந்துபுவனந்திரிந்தகுருகினம். (வருகினு)

௨. காடைவருகுதுகம்புகள்வருகுது
காக்கைவருகுதுகொண்டக்கிலாத்தியும்
மாடப்புறாவுமயிலும்வருகுது
மற்றொருசாரியாய்க்கொக்குகளெல்லாம்
கூடலையுள்ளாக்கிச்சைவம்பமாகிக்
கூடுஞ்சமணைநீடுங்கழுவேற்ற
ஏடெதிரேற்றியசம்பந்தமூர்த்திகள்
திட்டதிருமுத்தின்பந்தல்வந்தாற்போலே. (வருகினு)

௩. வெள்ளைப்புறாவுஞ்சகோரமுமாந்தையும்
மீன்கொத்திப்புள்ளுமரங்கொத்திபட்சியும்
இல்லையும்பஞ்சவர்ணக்கிளிகூட்டமுங்
கேகயப்பட்சியும்நாகணவாய்ச்சியும்

குற்றாலக்குறவஞ்சி.

உள்ளாறுஞ்சிட்டும்வலியானுமன்றிலும்
ஓலஞ்செய்தேகூடிநாலுஞ்சுதோற்றமாய்
துள்ளாடுஞ்சூலகபாலம்பிராட்டியார்
கொட்டாடுமைவர்ணப்பட்டாடைபோலவே (வருகினு)

சிங்கன்சொல்.

கொச்சகக்கலிப்பா.

ஈராயிரங்கரத்தானேற்றசங்குநான்மறையும்
ஈராயிரங்கநடஞ்செய்தவர்குற்றாலவெற்பில்
பாராய்பலமுகமும்பட்சிநிரைசாயுதையே
ஓராயிரமுகமும்பட்சிநிரைசாயுதையே

தரு-இராகம் கல்யாணி-ஆதிதாளம்

பல்லவி.

சாயினுமையே-பறவைகள்-சாயினுமையே

அநுபல்லவி.

சாயினுமையேபாயும்பறவைகள்
சந்தனக்காட்டுக்குஞ்சண்பகக்காவுக்கும்
கோயிற்குழல்வாய்மொழிமங்கைப்பெருக்குங்
குற்றாலநாயகர்சிற்றாற்றுவெள்ளம்போல் (சாயினு)

சரணங்கள்.

க. காராருஞ்செங்குளமேலப்பாட்டுப்பற்றுக்
காடுவெட்டிப்பற்றுநீடுசுண்டைப்பற்று
சீராரும்பேட்டைக்குளப்போடைக்காங்கேயன்
ஸ்ரீகிருஷ்ணன்மேடுமூனிக்குருகன்பேரி
ஏரிவாய்சீவலப்பேரிவடகா
லிராசகுலராமன் கண்டுகொண்டான்மேலே
மாரிப்பற்றுக்கீழைமாரிப்பற்றுஞ்சன
னேரிப்பற்றுஞ்சாத்தனேரிப்பற்றுஞ்சுற்றி (சாயினு)

உ. பாறைக்குளந்தெற்குமேல்வழுதிக்குளம்
பாட்டப்பெருங்குளஞ்செங்குறிஞ்சிக்குளம்
ஊருணிப்பற்றுந்திருப்பணிநீள
முயர்ந்தபுளியங்குளந்துவரைக்குளம்
மாறனேரிக்குளமளத்தளம்பாறை
வழிமறித்தான்குளமாலடிபற்றும்
ஆரணிக்குற்றாலர்தோட்டஞ்செய்நெடுஞ்செ
யபிஷேகப்பேரிக்கனைக்கன்பற்றிலுஞ் (சாயினு)

௫. ஐயர்குற்றாலத்துநம்பியார் திருத்து
மப்பாலொருதாதன்குற்றாலப்பேரி
செப்பும்புலியூரிலஞ்சிமேலகரஞ்
செங்கோட்டைசிவலநல்லூர்சிற்றம்பலம்
துய்யகுன்றக்குடிவாழவல்லான்குடி
காரண்டையூர்முதலுட்கிடைசுற்றியே
சொய்யுமலர்தாரிலஞ்சிக்குமரர்
குருவிளையாடுந்திருவிளையாட்டத்தில்

சிங்கன்சொல்.

கொச்சகக்கலிப்பா.

கொட்டழகுகூத்துடையார்குற்றாலநாதர்வெற்பில்
நெட்டழகுவாள்விழியும்நெற்றியின்மேற்கஸ்தூரிப்
பொட்டழகுங்காத்தழுகும்பொன்னழகுமாய்நடந்த
கட்டழகிதன்னழகென்கண்ணளவுங்கொள்ளாதே

தரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

மேயினுமையே பறவைகள் - மேயினுமையே

அநுபல்லவி.

மேயினமையேகுற்றாலநாதர்சீயன்குலசேகரப்பட்டிக்குளங்களும், ஆ
யிரப்பேரியுந்தென்காசியுஞ்சுற்றியயிலையும் தேளியுமாராலுங்கொத்தி
சாலைங்கள். [மே.

௧. ஆலயஞ்சூழத்திருப்பணியுங்கட்டியன்னசத்ரங்கட்டியப்பாலுந்தெ
ன்காசிப் பாலமுங்கட்டிப்படித்தாஞ்சேர்கட்டிப் பத்தசனங்களைக்
காக்கத்துசங்கட்டி- மாலயன்போற்றியகுற்றாலநாதர்க்குவழித்தொ
ண்டுசெய்திடக்கச்சைசகட்டிக்கொண்ட- சீலன்கிளுவையில்சின்னஞ்
சேந்திரன்சிறுகாலசந்திதிருத்தப்புரமெல்லாம் (மேயினு)

௨. காரண தலைவன்வயித்தியப்பன்பெற்றசைவக்கொழுந்துசருமத்து
வந்தகுறவஞ்சிதன்னைவசந்தவல்லிகண்டு மனமகிழ்ச்சிகொண்டு
சந்தமுலைத்துவளுமிடைத் துவளநகைப்பவளவிதழ்த்தையலேயுன்
சொந்தமலையெந்தமலையந்தமலை வளமெனக்குச்சொல்லென்றாளே,

குறத்திசொல்லல்.இம் புன்னாகவராளி ஆதிதாளம்.

கண்ணிகள்,

௧, வானரங்கள்கனிகொடுத்து மந்தியொடுகொஞ்சும்
மந்திசிந்துகனிகளுக்கு வான்கவிகள்கெஞ்சும்

௨, கானவர்கள் விழியெறிந்து வானவரையழைப்பார்
கமனசித்தர்வந்துவந்து காயசித்திவிளைப்பார்

௩ தேனருவித்திரையெழும்பி வானின்வழியொழுகும்
செங்கதிரோன்பரிக்காலுந் தேர்க்காலும்வழுக்கும்

௪, கூனலிளம்பிறைமுடித்த வேணியலங்காரர்
கொற்றவர்வாழ்திரிகூட மலையெங்கள்மலையே

௫, முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
முத்தமெங்கும் பரந்துபெண்கள் சிற்றில்கொண் டாடும்
௬, கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை யிடிப்போம்
௭, செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்
தேனலர்சண் பகவாசம் வானுலகம் வெடிக்கும்
௮, வழங்குகொடை மகராஜர் குறும்பலவி லீசர்
வளம்பெருகுந் திரிகூட மலையெங்கள் மலையே
௯, ஆடுமர வீனுமணி கோடிவெயி லெறிக்கும்
அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்
௰, வேடுவர்கள் தினைவிதைக்கச் சாடுபுனந் தோறும்
விந்தையகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்
௧௧, காடுதொறு மோடிவரை யாடுகுதி பாயும்
காகமணு காமலையில் மேகநிரை சாயும்
௧௨, நீடுபலவீ சர்கயி லாசகிரி வாசர்
நிலைதங்குந் திரிகூட மலையெங்கள் மலையே
௧௩, கயிலையெனும் வடமலைக்குத் தெற்குமலை யம்மே
கனகமக மேருவென நிற்குமலை யம்மே
௧௪, கயிலைமலை தென்மலைக்கு வடக்குமலை யம்மே
சகலமலை யுந்தனக்குள் அடக்குமலை யம்மே
௧௫, வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை யம்மே
வானிரவி முழைகள்தொறு நுழையுமலை யம்மே
௧௬, துயிலுமவர் விழிப்பாகி யகிலமெங்குந் தேடும்
துங்கர்திரி கூடமலை யெங்கள்மலை யம்மே
௧௭, கொல்லிமலை யெனக்கிளைய செல்லிமலை யம்மே
கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை யம்மே
௧௮, எல்லுலவும் விந்தைமலை யெந்தைமலை யம்மே
இமயமலை யென்னுடைய தமயன்மலை யம்மே
௧௯, சொல்லரிய சாமிமலை மாமிமலை யம்மே
தோழிமலை நாஞ்சினாட்டு வேளிமலை யம்மே
௨௰, சொல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்க ளாடும்
திரிகூட மலையெங்கள் தெய்வமலை யம்மே
௨௧, ஒருகுலத்திற் பெண்கள்கொடோம் ஒருகுலத்திற் கொள்ளோம்
உறவுபிடித் தாலும்விடோம் குறவர்குல மாங்கள்
௨௨, வெருவிவருந் தினைப்புனத்திற் பெருமிருகம் விலக்கி
வேங்கையாய் வெயில்மறைத்த பாங்குதனைக் குறித்தே
௨௩, அருளிலஞ்சி வேலர்தமக் கொருபெண்ணைக் கொடுத்தோம்
ஆதினத்து மலைகளெல்லாஞ் சீதனமாய்க் கொடுத்தோம்

உச, பாரிமகிழுமலையைத் துருவனுக்குக்கொடுத்தோம்
பரமர்திரிகூடமலை பழமைமலையம்மே

வசந்தவல்லி குறத்தியை நாட்டுவளமும்
நகர்வளமும் - வினவுதல்.

விருத்தம்,

கோட்டுவரைமுலைகாட்டுங்கொடியின்வளமிடைகாட்டுங்குறிஞ்சிப்பூக்க
காட்டுவளங்குழல்காட்டுமலைவளந்தானியுரைத்தாக்காட்டுவசனோன்
தோட்டுவளமுடிநாதர் திரிகூடமலைவளருந்தோகையேயுன்
னாட்டுவளமெனக்குரைத்து குற்றாலநகர்வளமு நவிலுவாயே,

குறத்தி - சொல்லுதல,

இ ம்-கேதாரகௌளம்-தாளம் ராப்பு,

கண்ணிகள்.

க, கூரமாங்குயிற்சின்னங் காமத்துரைவந்தான் வந்தானென்றூத
ஆரமாமுலை பின்னாரவர்வரல்குற்றோர்காலங்காரஞ்செய்யப்
பாரமாமதிவெண்குடைமிஞ்சப் பறகருங்கிள்ளைப்பரிகள்மின்கொஞ்சத்
தேரின்மாரனவசந்தனுலாவுந்திருக்குற்றாலாதென்னாரியநாடே

உ, காரைசேர்த்தகுழலார்க்குநாணிக கடலைச்சேர்ந்தகாற்பபாலரோம்
சேர்ந்தமுலைக்கிணைபாகுமலையைச்சேர்ந்துடலையான்றவாங்கு
நீரைச்சேர்ந்தாரையமபொலிலக்கொண்டவினைகேடிசெய்யோன்
தேனைச்சூழ்ந்திடக்காகாலம்வெல்லுந்திருநகுற்றாலர்தெனாரியநாடே

ங. கூழைவாசற்பலாவினிற்பாய்கமொழுமபலாக்கனி
வாழைபிற்சாயவாழைசாய்ந்தொரு காழைபிறழுகக
வருவிருந்துக்குபசரிப்பார்போல் தாழைசோறிட
தாழைதுறக்கிடுஞ் சந்திரசூடர்தென்னாரியநாடே

ச, அன்னலார்மொழிதன்னைப்பழித்ததென்றுடவர்மணணிறைந்தகரு
ம்பு, துன்னியமீளாநதுமடந்தையர், தோளைவென்றுசுகமுகதியமா
பினனுமங்கவர்முலைவென்று பிரியுககாலத்திற்பெண்மைமைவெல்ல
கன்னல்வேளுக்குவில்லாகவோங்குந கடவுளாரியநாடெங்கணாடே

ரு, தக்கபூமிக்குமுன்புள்ளநாடு சகலதேவர்க்குமன்புள்ளநாடு
முக்கண்ணனவிளையாடியநாடு மூவர்பாடிபுகழ்ந்திட்டநாடு
இக்கெலாம்வளர்ந்தோங்கியநாடு சிவத்துரோகமுநீங்கியநாடு
மைக்கண்ணாள்குழல்வாய்மொழிபாகர் வசந்தவாரியநாடெங்கணாடே

சு, அஞ்சுநூறுமமங்கண்டநாடு அனேகங்கோடியுகங்கண்டநாடு
கஞ்சயோனிபுதிக்கின்றநாடு கமலவாணிதுதிக்கின்றநாடு
செஞ்சொன்மாமுனிவரேகியநாடு செயவண்டாலவினுரியநாடு
வஞ்சிபாகத்திரிகூடநாதர் வசந்தவாரியநாடெங்கணாடே

மாதமுன் றுமழையுள்ளநாடு வருஷமூன்று விளைவுள்ளநாடு
வேதமூன்றும் பலிவுள்ளநாடு விசேஷமூன்றுங் குலாவுள்ளநாடு
பாதமூன்றுலகுஞ்செய்யுநாடு புவனமூன்றும் வலஞ்செய்யுநாடு
நாதமூன்றுவான குற்றாலநாதராரியநாடெங்கணாடே

நீங்கக்காண்பது சேர்ந்தவம்பாவம் நெருங்கக்காண்பது கன்னலிற்செ
நெல்-தூங்கக்காண்பது மாம்பழக்கொத்து சுழலக்காண்பது நீரகபிர்
த்து வீங்கக்காண்பது மங்கையர்கொங்கை வெடிக்கக் காண்பதுகொல
யினமுலலை-ஏங்கக்காண்பது மங்கலபேரிகை யீசராரியநாடெங்கணாடே

ஓடக்காண்பது பூம்புனல்வெள்ளம் ஒடுங்கக்காண்பது யோகியருள்
ம-வாடக்காண்பது மின்னார்மருங்குல் வருந்தக்காண்பது சூலுளைச்சங்
-போடக்காண்பது பூமியில்வித்து புலம்பக்காண்பது கிண்கிணிக்கொ
த்து-தேடக்காண்பது நல்லறக்கீர்த்தி திருக்குற்றாலர் தென்னாரியநாடே,

குறத்தி - தலமகிமை சொல்லுதல,

விருத்தம்,

அரிகூடவயன்கூடமறைகூடநினைந்தேடவரிதாய்நின்ற
திரிகூடப்பதியிருக்குந் திருநாட்டின்முறைக்கதெவிட்டாதம்மே
கரிகூடப்பிடிதிரியுஞ் சாரலிலேயொருவேடன்கைவில்லேந்தி
நரிகூடகைலைசென்ற திரிகூடத்தலமகிமைநவிலக்கேளே.

இராகம்-பிலஹரி தாளம் ஜம்பை,

கண்ணிகள்,

ஞானிகளுமறியாகள்சிதாநந்தமூல
நானறிந்தவகைகளிது சொல்லக்கேளம்மே
மேன்மைபெருந்திரிகூடத்தேனருவித்துறைக்கே
மேவுமொருசிவலிங்கத்தேவாசியமாய்
ஆனதொருஅயனுமுரைத்தானுமறியாமல்
அருந்தவத்துக்காய்த்தேடித்திரிந்தலையுங்காலம்
மேலானவானவர்கள்கெங்கள் கானவர்கள்காட்டு
மூதுகங்கையாறுசிவகங்கையாறே,

சிவமதுகங்கையின் மகிமைபுவனமெங்கும்புகழும்
செண்பகாடவித்துறையின்பண்புசொல்லக்கேளாய்
தவமுனிவர்கூட்டுறையவரிருக்குந்திசையுஞ்
சஞ்சீவிமுதலான விந்தைமூலிகையும்
கவனசித்தர் இருமொனயோகியருங்
காத்திருக்குக்கயிலாயமேற்றிருக்குமம்மே
கவரிபுலியானையும் இடமிடமதாகுந்தால்,
நங்கைமார்குரவையொலி பொங்குமாகட்லே,

௩, பொங்குகடலதிரிவேணிசங்கமெனச்செழிக்கும்
பொருந்துவசிட்டநதிக்கரையிற்பொன்னுமுத்துங்கொழிக்கும்
கங்கையென்றவடவருவிதனக்குச்சிரசாம
கலந்தாடக்கழிரோயநதித்தொலைந்தோடும்பாதம்
துங்கைவீதிசிற்பரந்தாங்கினங்கிர்மேவும்
தழைத்தமதிசிறசிரமெனுகுனகொழுத்தகயல்பாயும்
கொங்கலர்செண்பகசோலைசூழும்பலவாவீசர்
குற்றாலத்திரிகூடத்தலமெங்களதலமே,

௪, மன்றுதனிலகெயவமுறசென்றுமேன்முழங்கும்
வளமைபெறுஞ்சதாயுகமமகிமையெனவழங்கும்
ஈனறமகத்திரிபூசையன்றுசெய்ததலமே
நிந்தனைசெயுட்பதங்கள்வந்தனைசெய்ததலமே
பன்றிபொரவேடன்வலஞ்செனறதிருக்கத்தலமே
பற்றுகப்பரமருறைகுற்றாலத்தலமே
வென்றிபெறுங்கேவர்களுநகுன்றமாயமரமாய்
மிருகமதாய்த்தலமிருக்குமபெரியதலமமமே,

வசந்தவல்லி - கிளிவினவுதல் - விருத்தம்.

தீர்த்தவிசேடமுந்தலத்தின்சிறந்தவிசேடமுமுரைத்தாய்திருக்குற்றால
மூர்த்திவிசேடந்தனையுமொழிகோறுநீயுரைத்தமுறையாற்கண்டேன்
வார்த்தைவிசேடங்கள்கற்ற மலைக்குறவஞ்சிக்கொடியேவுருக்கைவாச
கீர்த்திவிசேடமும்பெரிய கிளிவிசேடத்தையுநீகிளர்த்துவாயே,

குறத்திசொல்லுதல்-இ ம-முகாரி ஏகதாளம்,

கண்ணிகள்.

௧, குற்றாலக்கிளைகளைக் கூறக்கேளம்மே
குலம்பார்க்கில்தேவரிலும் பெரியகுலங்கண்டாய்
பெற்றதாய்தந்தைதனையுற்றுநீகேட்கில
பெண்கொடுத்தமலையரசன்றனைக்கேட்கவேண்டும்
உற்றதொருபனிமலையின்சொற்றவேந்தனுக்கும
உயர்மதுரைமாறனுக்குஞ்செயமருகர்கண்டாய
வெற்றிபெறும்பாற்கடலிற்புற்றரவினுறங்கும
விருந்தர்க்குக்கண்ணுனை மைத்துனாகாணம்மே.

௨, ஆனைவாகனத்தாற்கும் வானுலகிலிருக்கும
ஆகுவாகனத்தார்க்குந்தோகைவாகனற்கும்
தானையாற்றந்தைக ரலெறிதமகனுறகு
தருகாழிமகனூர்க்குந் தகப்பனுரைகண்டாய்
சேனைமகபதிவாசலானைபெறுமபிடிக்குந்
தேனீன்றமலைச்சாரலமாணீன்றகொடிக்கும்

கரணாலர்மேலிருக்குமோனவையனார்க்குங்
காமனாதமக்குமிவாமாமனாரம்மே

௬ பொன்னுலகிற்றேவருக்குமண்ணுலகத்தவர்க்கும்
புகலரிய முனிவருக்கும்பாதலத்துள்ளார்க்கும்
அன்னவடிவெடுத்தவர்க்குமேனவுருவானவற்கும்
அல்லாதார்க்குமன்னுதித்த செல்வர்காணம்மே
முன்னுதித்ததலங்களைத் தமையெனவுரைப்பார்
மொழிக்கு மொழியலாம்பழுதில்லைக்காணம்மே
நன்னகரிற்குற்றாலநாதரிவர்வளத்தை
நானுரைப்பதரிதுலகுநானுரைக்குமம்மே,

வசந்தவல்லி வினாவுதல்- விருத்தம்,

நீர்வளரமேனிமலர்குற்றாலநாதர
ஞாலமாம்பாடியர்திருக்குலவஞ்சிக்கொடியேகேளாய்
கார்வளர்குழலாகமெல்லாமகருநீவிருதாயசொல்லும்
சீர்வளர்குறியின்மார்க்கந்தெரியவேசெப்புவாயே,

குறத்தி-சொல்லுதல்,

தரு இ தோடி ஆதிதாளம்.

பல்லவி,

வித்தாரமெனக்குறியம்மே மணி

அநுபல்லவி,

முத்தாரம்பூணுமிளமுலைப்பெண்ணே
வித்தாரமெனக்குறியம்மே

சரணங்கள்,

க, வஞ்சிமலையோடு கொஞ்சி கொங்கு
மங்காடநாடுங்கன மெச்சி
செஞ்சிவடகாசி ஈழம் சீனம்
சிங்களமீழம் கொழும்புவங்காளம்
தஞ்சைதிருச்சிராப்பள்ளிக் கோட்டை தமிழ்ச்
சங்கமதுரைதென் மங்கலப்பேட்டை திசை
மிஞ்சிகுறிசொல்லிப் போராய் திசை
வென்றுதான்பெற்ற விருதுகள்பாராய் (வித்தார)

நன்னகர்க்குற்றாலந்தன்னில் எங்கும்
கொட்டிமெண்ணூற்றெண்பத்தேழாண்டுதன்னில்
ஒன்னகமாமுனி போற்றத் தமிழ்ப்
பாண்டியனுமகத்திற்கூடுமேய்ந்த
தன்னருணூர்த்தி சபையை எங்க
சின்னணஞ்சாத்தேவன் செப்போடுமேயந்த

றென்னாட்டிலேகுறி சொல்லிப பெற்ற
மோகனமாலைபார் மோகன வல்லி (வித்தார)

௩, அன்பாய்டைகுண பாலில் கொல்லத்
தாணடொருநாளூற்றிருப்பந்து நாவில்
தென்காசியாலய மோங்கக் குறி
செண்பகமாறநருஞ் சொன்னபேர் நாங்கள்
நண்பாண்டியராசிய முய்ய சொக்க
நாயகர்வந்து மணக்கோலஞ் செய்ய
இன்பமதுரைமீ னாட்சி அன்று
பெண்களொடுகேட்டதற்கு சகத்தார் சாட்சி (வித்தார)

வசந்தவல்லி குறிகேட்குதல்.

விருத்தம்,

கலவிக்குறிநிவள்கொண்டே காமனைச்சிங்கிகொள்வாய்
குலவித்தைகுறியேயானும் குறவஞ்சிகுறைவைப்பாயோ
பலவுக்குங்கனியாய்நின்ற பரமர்குற்றாலநாட்டில்
இலவுக்குஞ்சிவந்தவாயா ளெனக்கொருகுறிசொல்வாயே.

குறத்திசொல்லல இ-ம்-அடாணா-ஆதிதாளம்,

கண்ணிகள்,

க. என்னகுறியாகிலுநான்சொல்லுவே னம்மே சது
ரேறுவேனெதிர்த்தபேரைவெல்லுவே னம்மே

உ, மன்னியர்கள்மெச்சுங்குறவஞ்சிநா னம்மே என்றன்
வயிற்றுக்கித்தனைபோதங்கஞ்சிவா ரம்மே

௩, பின்னமின்றிக்கூழானாலுங்கொண்டுவா வம்மே-வந்தால்
பெரியசுளைக்குறிகைமட்டுமுண்ணுவே னம்மே

௪. தினைவிலையும்பிளவுமளித்தா வம்மே-கப்பல்
சீனச்சரக்குந்தக்கிணிகிள்ளித்தா வம்மே

௫, அம்மேயம்மேசொல்லவாராய்வெள்ளச்சி வம்மே-உனக்
காக்கம்வருகுதுபாராய்வெள்ளிச்சி யம்மே

௬, விமலமூலைக்கன்னிசொன்னபேச்சுநன் றம்மே-நேரே
மேற்புறத்திலாநதையிட்டவீச்சுநன் றம்மே

௭, தும்மலுங்காகமுமிடஞ்சொல்லுதே யம்மே-சரம்
சூட்சமாகப்பூரணத்தைவெல்லுதே யம்மே

௮, செம்மையிதுநன்னிமித்தங்கண்டபோ ரம்மே-திரி
கூடமலைத்தெய்வமுனக்குண்டபோ ரம்மே

இதுவும் - குறத்திசொல்லுதல்,

விருத்தம்,

பல்லியும்பலபலென்னப பகருதுதிரிகூடத்திற்
கலவிமான்சிவப்பிணாமிர்கான கழுத்தினமேனமருவுமுள்ளான்
நலலமேறகுலத்தாரிந்த நன்னகர்ககலதகாருக
வலலியேயுனககுநல்ல மாபபிள்ளைவருவானமமே.

இதுவுங் குறத்தி சொல்லுவது,

ஸ்ரீராகம அடதாளசாபபு,

கண்ணிகள்,

௧, தனாமெழுகுகோலமிடுமுறைபெறவேணடெநினையமமேகுட-தாங்
காமுப்பழமபடைபபாயதேவகாயு முடைதுதுவைப்பாயமமே
௨. அறுகுபுனல்விளக்கிடுவாயடைகாயவெள்ளிலைகொடுவா - யம்மே
வடை-அப்பமவலவர்க்கவரைவையொபபெறிவையமமே
௩, நிறைநாழியளநதுவைப்பா யிறையோனைகநாநகுபிடபாயம்மே குறி
நிலவரத்தைத்தேர்நதுகொளவாய்குலதெயவததைநோநதுகொள்வா
யம்மே
௪, குறிசொல்லவாகுறிசொலலவாயிறைநுகலேகுறிசொல்லவாவம்மே
ஐயர் குறும்பலவாதிருவுளத்தாற பெருமபலருகு குறிசொலலவாவ
குறத்திசொலலுகல-கட்டளைககலித்துறை, [மமே

ஆனேறுசெலவர்திரிகூடநாக ரணிநகாவாழ்
மானேவசநதபபசுங்கொடியே வநதவேளைநன்றே
தானேயிருநகதலமுநன்றே செழுந்தாமரைபபோற்
கானேறுகைமமலராகாட்டாயமனககுறி நாட்டுகறகே.

இம கல்யாணி சாப்புதாளம்- கண்ணிகள்,

௧, முத்திரைமோதிரமிட்டகையைக்காட்டா-யமமே
முனைகமுதாரியிட்டகையைககாட்டாய
௨, அஸ்தகடகமபுனைந்தகையைககாட்டாய-பொன்னரி
னலங்காரநெளியிட்டகையைககாட்டாய்
௩, சித்திரசூடகமிட்டகையைககாட்டா-பசுஞ
செங்கைமலர்ச்சககரேகைகையைக்காட்டாய்
௪, சக்கிபீட கதிரைவாநன்னாக்குவளை வந்த
சஞ்சீவியேயுனதுகையைககாட்டாய்,

கொச்சகக்கலிப்பா

ஏழைபாகர்செங்கைமழுவேற்றவர்குற்றாலர்வெற்பில
வாழிகொண்டமோகவநதவல்லிகையபாாத்து
வீழிகொண்டுசெங்கனிவாயமிக்குறவஞ்சிபழங்
கூழைபுண்டவாயாற்குறியைமீண்டுசொலவாளே,

குறத்திசொல்லுதல் - இ-ம்-பைரவி- ரூபகதாளம்,

கண்ணிகள்,

க, மாறுமலிருநிலத்தி லறம்வளர்க்குங்கையே
மனையுறத்தாலறமபெருக்கித் திறம்வளர்க்குங்கையே

உ, வீறுகநவகிரியம் விளைவுமிந்தக்கையே
மேன்மேலுமபாலமுக மனையுமிந்தக்கையே

ங, ஆறுதசனைகள்பரி யாற்றுமிந்தக்கையே
அனைகனையார்வணங்கிநிதம் போற்றுமிந்தக்கையே

ச, பேராகனனகாங் காக்குமிந்தக்கையே
பிறவாதநெறிதாரகமே யேற்குமிந்தக்கையே

குறத்தி தெய்வம்பரவல்

விருத்தம்.

கைக்குறிபார்க்கிலிந்தக் கைப்பிடிப்பவர்தாமெட்டுத்
திக்குமேயுடையராவர் ஜெகமகராசிநீயே
இக்குறிபொய்யாதெனறே யிறையவர்திரிகூடத்தில்
மெய்க்குறவஞ்சிதெய்வம் வியப்புறவணங்குவாளே.

ஆசிரியப்பா

குழல்மொழியுதித்தார் குறும்பலாவுடையார்
அழகுசந்நிதிவாழும்பலவிநாயகா
செந்தில்வாழ்முருகா செககண்மாலமருகா
கந்தனேயிலஞ்சிக் கடவுளேசரணம
புள்ளிமானீன்ற பூவையேகுறக்குல
வள்ளிநாயகியே வந்தெனககுதவாய்
அப்பனேமேலை வாசலிலரசே
செப்பருமலைமேற் றெய்வகன்னியர்கள்
ஆரியங்காவா வருட்சொரிமுக்தே
சேரியகுளத்தூர் நின்றசேவகனே
கோலமாகாளி குற்றாலங்காய்
காலவைரவாகன் துடிகறுப்பா
முன்னடிமுருகா வன்னியராயா
மன்னியபுலிபோல் வருமபன்றிமாடா
எக்காலதேவி துர்க்கைபிடாரி
யிக்கதோர்குறியாய் வேண்டினேனுங்களை
வந்துமுன்னிருந்து வசந்தமோகினிப்பெண்
சிந்தையிலினைத்தது சிவனோபொன்னோ

சலவையோபட்டோ தவசதானியமா
கலவையோபுழுகோ கஸ்தூரியோ
வட்டிலோசெம்போ வயிரமோமுத்தோ
கட்டிலோமெத்தையோ கட்டிவிராகனோ
வைரப்பொடுசெப்போ ரத்தொடுசெலவோ
கைப்படுதிரவியங் களவுபோனதுவோ
மறுவிலாப்பெண்மயல் வருந்திருஷ்டிதோஷமோ
திரிகண்ணரானவர் செய்தகைமயக்கமோ
மனைவாசலிவர்மேல மயலசொலலிவிட்டதோ
கனை … மோக காமித்தகுறியோ
சேனை … ந்தினறியக்கமோ
மாலையுமணமும் வரப்பெருகுறியோ
இத்தனைகுறிகளி லெவர்குறியிதுவெ
வைத்தோர்குறியை வகுத்தருளீரே,

குறத்திசொல் - விருத்தம்,

கடிக்கிடுமரவம்பூண்ட கருத்தர்குற்றாலர்நேயம்
பிடிக்குதுகருத்துநன்றாய்ப பேசுதுசக்கதேவி
துடிக்குதெனதுகடுநாவுந் சொல்லுசொல்லென்றுவாயில
இடிக்குதுகுறளியம்மே யினிகுறிசொல்லக்கேளே,

குறத்திசொல்லுதல்-இராகம் பிலஹரி சாப்புதாளம்,
கண்ணிகள்,

சொல்லக்கேளாய்குறி சொலலக்கேளாய் - யம்மே
தோகையர்க்கரசே குறிசொலலக்கேளாய்
முல்லைப்பூங்குழலாளே நன்னசிலவாழ் - முத்து
மோகனப்பசுங்கிளியே சொல்லக்கேளாய
பல்லக்கேறுந்தெருவிலானைநடத்தி - மணிப்
பணியாபரணம்பூண்ட பார்த்திபன்வந்தான்
செல்வப்பூங்கோலத்தையேநீகண்டிக்கையி - லவன்
சேனைகண்டவெருட்சிபோலகாணுதேயம்மே.

வசந்தவல்லிசொல்லுதல் இராகம் பந்துவராளி-தாளம்-திரிபுடை,
கண்ணிகள்.

கன்னுனன்றுகுறவஞ்சிநாட்டுக்காரி- இந்த
நாட்டாண்போககானவார்த்தைகானறியேனே
ஒன்றுகேட்டாதே குறிசொல்லியேவந்தாய் பின்னை
புழம்பிபோட்டாய்குறியுங்குழம்பிப்போட்டாய்
மன்றில்வருஞ்சேனைதனைக் கண்டுபயந்தால் - இந்த
மையலுமகிழுகிறப்புந்தையலார்க்குண்டோ

௪, இன்றுவரையேகுளிருங்காய்ச்சலு முண்டோடா பின்னை
யெந்தவகையென்குறி கண்டுசொல்லடி.

குறத்திசொல்லுதல் - கண்ணிகள்,

க, வாகனத்திலேறிவரும் யோகபுருஷன் அவன்
வங்காரப்பவனியானை பெண்களுக்குள்ளே

௨, தோகைநீயவனைக்கண்டு மோகித்தாயம்மே அது
சொல்லப்பயந்தேயிருந்தேன சொல்லுவேனமுன்னே

௩, காகமணுகாதகிரிக் கூடமலைக்கே - உன்மேல்
காய்ச்சலல்லகாய்ச்சலல்ல காமக்காய்ச்சல்காண்

௪, யோகினியேயுன்னுடற்கிறுகிறுப்பெல்லாம்
மோகக்கிறுகிறுப்படிமோகனக்கள்ளி

வசந்தவ ல்லுதல்-கண்ணிகள்,

க, கன்னியென்றானிரு னகர்க்குள்ளே
காமியென்றாய்க்குற ாயமறியாமல்

௨, சன்னைபாகச்சொன்னேன்குறி சாதிப்பையானால்-அவன்
தாருஞ்சொல்லிபேருஞ்சொல்லியூருஞ்சொல்லடி.

குறத்திசொல்லுதல் - கண்ணிகள்,

க, உன்னைப்போலெனக்கவ னறிமுகமோ
ஊரும்பேருஞ்சொல்வதுங் குறிமுகமோ

௨, பின்னைபுந்தானுனக்காகச் சொல்லுவேனம்மே
பெண்சேரவல்லவனாண் பெண்கட்கரசே

வசந்தவல்லிசொல்லுதல்-கண்ணிகள்,

க, வண்மையோ வாய்மதமோவித்தைமதமோ-என்முன்
மதியாமலபெண்சேரவல்லவனென்றாய்

௨, கண்மயக்காமல்மயக்காதே யுண்மைசொல்லடி
கானமலைக்குறவஞ்சிக் கன்னிமயிலே

குறத்திசொல்லுதல-கண்ணிகள்,

க, பெண்ணரசேபெண்ணென்றால்திரியுமொக்கு - மொரு
பெண்ணுடனேசேரவென்றால்கூடவுமொக்குமே

திண்மைமாகவல்லபனும் நாதனுமொக்கும்
திரிகூடநாதனொன்றே செப்பலாமம்மே

கவிகூற்று,

மன்னாதிரிகூடநாதனொன்னும்பேர்சிலேமுகம்
மாணிக்கவசந்தவல்லிநாணிக்கவிழ்ந்தாள

குறத்திசொல்லுதல்-கண்ணிகள்,

நன்னகரிலீசருனை மேவவேவாரா - இந்த
நாணமெல்லாம்நாளைநானும் காணவேபோறேன்

கைநொடியிற்பொன்னிதழிமாலைவருகா-ணினி
கக்கதறிவிடெருவாயுன்வெட்கத்தைதாமமே

என்னுமொருகுறவஞ்சி தன்னையழைத்தே அரு
கிட்டுசெருவாபரணம்பூட்டினளே,

சிஙகன்வருதல் - விருததம,

பாமாலைதிரிகூடப்பரமருள்பெறவசந்தப்பாவைகூந்தல்
பூமாலையிதழிபெறப்பொன்மாலை மணிமாலைபொலிவயப்பூண்டு
நாமாலைக்குறவஞ்சிநன்னகா பட்டணமுழுதுமடக்குநாளில
வாமாலைபூண்டசிஙகன் வஙகணச்சிங்கியைத்தேடிவருகின்றனே.

இதுவுமது - விருத்தம்,

வக்காவின்மணிபூண்டு கொக்கிறகுசிகைமுடித்துவரித்தோற்கச்சை
தொக்காகவரிந்திறுக்கித்தொடர்புலியைசகண்டுறுக்கித் தூணிதூக்கிக்
கைக்கானவாயுதங்கள்கொண்டுசிலலிந கோலெடுத்துக் கண்ணிசேர்த்
துத், திக்கடங்காக்குளுவசிஙகனகுற்றாலத்திரிகூடச்சிங்கன்வந்தான்.

இதுவுமது - விருத்தம்,

வக்காவின்மணிசூடி வகைக்காரிசிஙகிவருமவழியைத்தேடி
மிக்கானபுலிகாடிகிடுகிடெனநடிநடுக்கவெறித்துநோக்கிக்
குக்காவென்றோலமிடுங்குருவிகொக்குக் கேற்றகண்ணிகையில்வாங்கி
தொக்காகநடைநடந்து திரிகூடமலைக்குறவன்தோன்றினனே,

இ ம்-அடாணா சாப்புதாளம்-கண்ணிகள்,

காக்கிறகுசூடிக்கொண்டு குருவிவேட்டையாடிக்கொண்டு
க்காவினமணிபூட்டிக்கொண்டு மடவார்கண்போலிட்டிக்கொண்டு

தொக்காய்ச்சையிறுக்கிக்கொண்டு தூர்ணுமீசைமுறுக்கிக்கொண்டு
திக்கடங்காக்குறவசிங்கன திரிகூடச்சிங்கன்வந்தான,

சிங்கன சொல்லுதல - விருத்தம,

ஆளிபோற்பறக்கசுநம்பி தைசீட்குந் திரிகூடத்தமலர்நாட்டில்
வேளைதொறும்புகுந்துநீளையாட்டாக கண்ணிகுத்திவேட்டையாடி
ஞாளிபோற்சுவடெடுத்தூப பூனைபோலொளிபோட்டு நரிபோற்பம்மிக்
கூளிபோற்றிரட்டங்கடிக்கும் திரிகூடப்பெரியசிங்கக்குறவனானே,

இ ம தனையாசி ஆதிதாளம- கண்ணிகள்,

க, தோநக்கரியார்மூலைரிற்பெரியார் சித்திரச்சபையாசித்திரநிதிசூழ் கோயிலிறபுறவிலகாவலிலடைகாக குருவிகளபடுக்குங் குறவனு நானே.

உ, காதலஞ்செழுத்தாற்போதகிரணியர்கைகநரமபெடுத்துக் கின்னர ந்தொடுத்துப பாதகா தோசல் பலதவிலடித்தும் பறவைகள்படு க்குங்குறவனும்நானே,

ங, தலைதனிறபிறையாாபலஙினிலுறைபவர் தாளிணைவணக்கார் சிகை தனைப்பிடித்தே-பலமயிரநறுக்கிச சிலகண்ணியிறுக்கிப் பறவைக ள்படுக்குங குறவனுமநானே,

ச, ஒருகுழைச்சங்கமற நகுழைக்தங்கம் உரியவிநோதர்திரிகூடநாதர் திருநாமம்போற்றிதிருநீறுசாத்திதிரிகூடநாமச் சிங்கனும்நானே,

நூவன்வருதல-விருத்தம்,

புலியொடுபுலியைத்தாக்கிப் போர்மதயானைசாய்க்கும்
வலியவாதிரிகூடத்தில மதப்புலிசிஙகன்முனனே
கலிகளுகைகூடதயும்பேசிக கையிலேயிட்டிவாங்கி
எலிகளைதலுரத்துமவீர னிபபுலிநூவனவந்தான,

இ-ம-அடானாசாப்புதாளம்,

கண்ணிகள்.

க, ஊர்க்குருவிக்குக கண்ணியுமகொண்டு உள்ளான்படுத்தது மெண் ணிககொணடு - மார்க்கமெல்லாம்பலபேசிககொண்டு கோட்கார நூவனும்வந்தான்

உ, கரிககுருவிக்குக்கண்ணியுமகொண்டு காநுங்கோழிக்குப் பெரியு க்கொண்டு வரிசிலைக்குறுவரிற்கவுண்டன் வாய்ப்பான நூவனும் வந்தானே,

ங, ஏகலைநாடனைக்கத்திக்கொண்டு எலியானைபுசியானையேவிக்கொண் டு வாகைசிங்கனைமேவிககொண்டு வங்காரநூவனுமவந்தானே,

கொட்டக் துணைபோலக்கால்விளைக்க ஓடைகம்போலேமேலிலங்க
கட்டாணைத்திரிகூடச்சிங்கனையடிவாயனுமானே,

சிங்கன் பட்சிகளைப்பார்த்தல்

விருத்தம்,

பூவனைமதிலுஞ்சாய பூரலாலவீரனுநேயக
சேவகாதிருக்குற்றாலர் திருவினைப்பாட்டதன்னில
பாலகமாகநாவன பறவைபோற்பறவைக்கூவி
மாவினைமேதிச்சிங்கன வருமபடியாகின்றானே,

தரு இம கலயாணி - ஆதிதாளம்,

பல்லவி,

வருகிறுமையே - பறவைகள் - வருகிறுமையே,

அநுபல்லவி,

வருகிறுமையே திரிகூட நாயகர்
வாட்டமில்லாப்பண்ணைப் பாட்டப்புறமெல்லாம்
குருகுநாரையும் அன்னப்பூந்தாராவும்
கூடைக்கிடாக்கன்றும் நாகொக்காநாரையும் (வருகிறு)

சரணங்கள்,

சேணிரிமேலப்பணாற்றங்கணிலயத்தைக்க
திரிகூடநாதர்கிரிமாது இவட்டையில
மணமறைநுவனாகரிசைப்பட்டாரக்கத்தைக்க
மங்கைக்கருநாலும் வரிசைசெய்யவேமென்ன
அன்னதயவுடை யாகாசக்கனைக்
பதிக்கக்காக்காணப்புறப்படுந்தத்திபோல
பொன்னிறவாமென்றுகுசத்தலை நிறமாகப்
புரிந்துவனத்திரிந்து குருகினம் (வருகிறு)

காடைவருகுதுகம்புள்வருகுது
காகங்கைவந்துக்கொண்டலாத்தியும்
மாடப்புறாவும் மயிலும்வருகுது
மறமொருசாரியாயக்கொக்குத்திரளெலாம்
கூடலையுளாக்கிச்சைவம்புறம்பாக்கி
கூடுஞ்சமணரைநீடுவைக்கழுவேற்ற
ஏட்டிலேற்றியசம்பந்தமூர்த்திகள்
திட்டதிருமுத்தின்பந்தல்வந்தாற்போலே, (வருகிறு)

வெள்ளைப்புறாவுஞ்சகோரமுமாந்தையும்
மீன்கொத்திப்புள்ளுமரங்கொத்திப்பட்சியும்
கிள்ளையும்பஞ்சவர்ணக்கிளிக்கூட்டமும்
கேகயப்பட்சியுமாக்கணவாய்ச்சியும்

உள்ளானுஞ்சிட்டுவெளியானுமன்றிலும்
உலகுசெய்தேகூடிநாலஞ்சுதோற்றமாய்
துள்ளாடுங்குலகபாலர்பிராட்டியார்
தொட்டாடுமைவர்ணப்பட்டாடைபோலவே. (வருகுது)

சிங்கன்சொல்- கொச்சகக்கலிப்பா.

ஈராயிரங்கரத்தா னேற்றசங்குநான்மறையும்
சீராயிரங்கடஞ் செய்தவாகுற்றாலவெற்பில்
பாராய்பலமுகமும் பட்சிஜாலசாயுதையே
ஓராயிரமுகமும் பட்சிநிறைசாயுதையே.

தரு-இ-ம்-கல்யாணி- ஆதிதாளம்.

பல்லவி.

சாயினுமையே பறவைகள்-சாயினுமையே.

அநுபல்லவி,

சாயினுமையேபாயும்பறவைகள்
சந்தனக்காட்டுக்குஞ்சண்பகக்காவுக்கும்
கோயிற்குழல்வாய்மொழிமங்கைப்பேருக்குங்
குற்றாலநாயகர்சிற்றாற்றுவெள்ளம்போல (சாயினு)

சரணங்கள்,

ஆராருஞ்செங்குளமேலப்பாட்டுப்பற்றுக்
காடுவெட்டிப்பற்றுநீடுசுண்டைப்பற்று
சீராருமபேட்டைக்குளப்போடைக்காவேயன்
ஸ்ரீகிருஷ்ணன்மேடுமுனிக்குருகன்பேரி
ஏரிவாய்சிவலப்பேரிவடகர
வீராசகுலராமன்கண்டுகொண்டான்மேலை
மாரிப்பற்றுவகீழைமாரிப்பற்றுஞ்சன
நேரிப்பற்றுஞ்சாத்தனேரிப்பற்றுஞ்சுற்றி (சாயினு)

பாறைக்குளந்தெற்குமேல்வழுதிக்குளம்
பாட்டைப்பெருவகுளஞ்செங்குறிஞ்சிக்குளம்
ஊருணிப்பற்றுந்திருப்பணிநீள
முயர்ந்தபுளியங்குளநதுவரைக்குளம்
மாரனேரிக்குளமராத்தளம்பாறை
வழிமறித்தான்குளமாலடிபற்றும்
ஆரணிகுற்றாலர்தோட்டச்செய்
அபிஷேகப்பேரிக்கணக்கன்பற்றிலுஞ் (சாயினு)

ஐயர்குற்றாலத்தாம்பியார்திருந்து
மப்பாலொருதாதன்குற்றாலப்பேரி
செய்யும்புலியூரிலஞ்சிமேலாகரந்
செங்கோட்டைசீவலநல்லூர்சிற்றம்பலம்

ரு

துய்யகுன்றக்குடிவாழவல்லான்குடி
  சரண்டையூர்முதலூட்கிடைசுற்றியே
கொய்யமலர்த்தாரிலகுசிவகுமர
  குருவிளையாடுந்திருவிளையாட்டத்தில் (சாயினு)

சிங்கன்சொல் கொச்சகக்கலிப்பா.

கொட்ட முழுங்கத்துடையார் குற்றாலநாதர்வெற்பில்
நெட்டமுகுவாள்விழியும் நெற்றியின்மேற்கஸ் தூரிப்
பொட்டழகுங்கரத்தழகும் பொன்னழகுமாய்நடந்த
கட்டழகிதன்னழகென் கண்ணளவுங்கொள்ளாதே.

தரு ௫ம் கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி,

மேயினுமைமயே பறவைகள் மேயினுமையே,

அநுபல்லவி

மேயினுமையேகுற்றாலநாதர்வியன்குலசேகரப்படிக்குளங்களும்
ஆயிரப்பேரியுந்தென்காசியுஞ்சுற்றி யயினையுந்தேரியு மாராலும்
கொத்தியே (மேயினு)

சரணங்கள்

ஆலயஞ்சூழத்திருப்பணியுங்கட்டி யன்னசத்ரங்கட்டி யப்பாலுந்தென்காசிப், பாலமுஞகட்டிப் படித்தாரஞ்சேர்க்கட்டி பத்தசனங்களைக் காக்கத்துசங்கட்டி, மாலயன்போற்றிய குறறாலநாதர்க்கு வழித்தொண்டு செய்திடக் கச்சைக்கட்டிக்கொண்ட, சிலன்கிளுவையிலசின்னஞ்சேந்திரன் சிறுகாலசந்தி திருத்துப்புறவெல்லாம. (மேயினு)

௨, தானைத்தலைவன்வயித்தியபப்பன்பெற்ற சைவக்கொழுந்து தருமத்துக்காலயத்து, சேனைச்சலரிப்பெருமாள்சகோதரன செல்வமருதூர் வயிருதியயபபனுடன், மானவன்குற்றாலநாதனைப்பெற்றவன் வள்ளலெனும பிச்சைப் பிள்ளைத்திருத்தெலலாம, கானக்குளத்துள்வாய் கீழைப் புதுக்குளங் கற்பூரக்காற்பற்றுந் தாட்டான்குளஞ்சுற்றும் (மேயினு)

௩, மன்னன்கிளுவையிற் சின்னணஞ்சேந்திரன் வடகரைவீட்டுக்கு மந்திரியாகவும், செங்கெல்மருதூர்க்கு நாயகமாகவுந் தென்காசி யூருக்குத் தாயகமாகவும், தன்னைவளர்க்கின்றகுற்றாலநாதர் தலத்தைத்வளர்க்கின்ற தானிகனுகவும நன்னர்குற்றாலதந்தாதிசொன்னவன் நண்ணுர்தொழும்பிச்சைப் பிள்ளைத்திருதெல்லாம, (மேயினு)

௪. நன்னகருர்கட்டிச்சாலைமடங்கட்டி நாயகர்கோவிற்கொலுமண்டபங்கட்டி தென்னமரம் பரமானந்தத்தோப்பிட்டுத் தெப்பக் குளங்கட்டித்தேர்மண்டபங்கட்டிப் பன்னுந்திரிகூடத் தம்பங்கட்டிப், பசுப்பிரைகோடித்திருப்பணியுங்கட்டி யங்காளில்தர்மக்களஞ்சியங்கட்டு மனந்தபதுமநாயன கட்டளைப்பற்றெல்லாம், (மேயி)

ரு, நற்கைமுன்கட்டினவம்பலத்துக்கு தன்மத்துக்கும்சிலைக் கண்ணு
டிபோலவே எந்தையாரவரசலிற்பிள்ளையார்செய்வித் திரண்டுகுறிஞ்சி
ப்படித்துறையுஞ்செய்த கொந்தார்புயத்தானி ராக்கதப்பெருமாள் குற்
றாலநாதன் முனனீற்றகோசரன் வரதனைசோசக்கு முத்துதன்மைத்து
னன் மனனன்வயித்தியன் நாதனதிருக்கெல்லாம், (மேயினு)

சு, ஆமேல்வருகின்றதுன்பமுநீக்கி யடங்கார்குறும்புமடக்கியேதென்
காசியூர்மேலுபாந்த மனுநீதிநாட்டியுடையவர் குற்றாலர்பூசைனைவேத்
தியமேதா மேமவிருநாளுந் தெப்பற்றிருநாளும் சித்திர மண்டபஞ் சத்
திரச்சாலையும் பார்மேல்வளஞ்செய்யனாத பத்மநாபன்பாலன்வயித்திய
நாதன்திருக்கெல்லாம, (மேயினு)

எ, ஆறையழகப்பபூபாலன கட்டளையன்பன் திருமலைக்கொழுந்துத
ன்கட்டளை நாறும்புகுற்றாலச்சகுனகட்டளை நக்கனெல்லாரி நரபா
லன்கட்டளை வீறுசோபாலவண்ணச் சகுதனகட்டளை மிக்கான வோ
மனார் கிருஷ்ணனவணீசேசன் பேறுடையன்பன் வருசங்கு முத்துத
னபேரானகட்டளைச் சீரானபற்றெலாம், (மேயினு)

அ, தானிதன்சர்க்கரைப்பண்டாரமென்னுந் தணியாதகாதற்பணிவிடை
செய்கின்ற மேன்மைபெருஞ்சுங்காத் தோழன்கட்டளை மிக்க கருவைப்
பதிராமநாயகன் நாவில மமபுகழ்தாகதிக் தானுடன் வலனூர்வருஞ்ச
ங்கரமூர்த்திகட்டளை ஆனைசடைத்தம்பிரான் பிச்சைகட்டளையப்பால்நா
ட்டார்கட்டளைப்பற்றெலலாம், (மேயினு)

சிஙகன்சொல்-கொச்சகக்கலிப்பா,

செட்டிககிரங்கிவினை தீர்த்தவாகுற்றாலவெற்பில்
சுட்டிகசிணங்குறுதம் சுந்தரியாள்கொங்கையின்மேல்
முட்டிக்கிடந்துகொஞ்சி முத்தாடிக்கூடிநனறாய்க்
கட்டிக்கிடக்குமுலைக் கச்சாய்க்கிடந்திலனே.

தரு இம்-கலயாணி தாளம் சாப்பு.

பல்லவி,

கண்ணிகொண்டுவாடா குளுவா கண்ணிக்கொண்டுவாடா

அநுபலலவி,

கண்ணிகொண்டுவாடா பண்ணவர்குற்றாலர்
காரார்திரிகூடச்சாரலிலேவந்து
பண்ணியபுண்ணியமேறினாற்போலே
பறவைகளெல்லாம் பறந்தேறிமேயுது (கண்)

சரணங்கள்,

மானவாகுழுமதுரையிற்பாண்டியன்
அந்திரியார்க்கிளமுந்திப்பணமபோட்டுத்

தாணைசப்பட்டுமுன்கொண்டபொக்கெல்லாந்
  தரிகொண்டதில்லைநரிகொண்டுபோச்சுது
கானவர்வேடத்தையினமென்றெண்ணாதே
  காக்கைப்படைத்தகருமுகில்வண்ணனும்
மேனாட்படுத்திட்டகொக்கினையும்
  விடைமேலிருப்பார்சடைமேலிருக்குது (கண்)

முன்னாள்படுத்தபழம்பெருச்சாளியை
  மூத்தபிள்ளையார்மோடிவாய்க்கொடுபோனார்
பின்னானதம்பியாராடுமயிலையும்
  பிள்ளைக்குறமாப்பிடித்துக்கொண்டேகினார்
பன்னருமன்னத்தைநன்னகரீசர்
  பரிகலமீதிடும்பார்பாலுகந்தனர்
வன்னப்பருந்தொருகள்வன்கொடுபோனான்
  வக்காவுநாரையுங்கொக்கும்படிக்கவே (கண்)

மீறுமிலஞ்சிக்குறத்தியைக்கொண்டசெவ்
  வேட்குறவன்முதல்வேட்டைக்குப்போனநாள்
ஆறுநாடகூடிப்பொருகொக்குபட்ட
  தகப்பட்டகொக்கை யவிகதொருசட்டியில்
சாறுகவைத்தப்பின்வேதப்பிராமணர்
  தாமுட்கொண்டாரசைவதாமுறைகொண்டார்தவப்
பேருமுனிவருமோற்றுக்கொண்டாரினிப்
  பிக்குச்சொல்லாமலேகொக்குப்படிக்கவே. (கண்)

கவிக்கூற்று-கொச்சகக்கலிப்பா,

ஆனைகுத்திச்சாய்க்கதிறலாளர்திருக்குற்றாலர்
கூனிகொத்திமுக்கிவிக்கிக்கொக்கிருக்குமயிலையெல்லாம்
சேனைபெற்றவாட்காரச்சிங்கனுக்குக்கண்ணிகொண்டு
பூனைகுத்திநூவன்பூனையைப்போலவந்தானே,

நூவன்-சொல்லுதல்-இ ம்-காமபோதி சாப்புதாளம்.

கண்ணிகள்.

கலந்தகண்ணியைநெருக்கிக்குத்தினால்காக்காயும்படுமே
  கா காயும்படுமே
மலர்ந்தகண்ணியைக்கவிழ்த்து குத்தினால்வக்காவும்படுமே குளுவா
  வக்காவும்படுமே
உலர்ந்தகண்ணியையிறுக்கிக் குத்தினாலுள்ளானும்படுமே குளுவா
  உள்ளானும்படுமே
[illegible]ந்தகண்ணியைத்திருத்திக்குத்தடாகுற்றாலமலைமேல் குளுவா
  குற்றாலமலைமேல்

குற்றாலக்குறவஞ்சி.

சிங்கன்சொல் கொச்சகக்கலிப்பா,

கன்றலவு கொன்றையந்தார்க்கர்த்தர்திரிகூடவெற்பில
இளமதிவாணுதலாள்பேசாதவிரதடங்கித்
தாளிமடிமேலிருந்து தோளின்மேலேறியவள்
கிளிமொழிகேட்கவொரு கிள்ளையானேனிலையே,

தரு இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்,

பல்லவி,

கெம்பாறடையே - பொறுபொறு - கெம்பாறடையே,

அநுபல்லவி,

கொம்பாறடையேநம்பாகுறவர்
  கிருபைப்புறவிலபறவைபடுக்கவே
வம்பாகவந்தவுன் சதத்தைக்கேட்டல்லோ
  வந்தகுருவிகலேந்தோடிப்போகுது (கெம்பா)

சரணங்கள்,

ஏறுகமீன்களு மேறிவருகுது
  எத்திசைப்பட்டகுருகும்வருகுது
நாறுறுகண்ணியைப்பெருக்கக்குகடியே
  நாவலுநாளுமிருந்தோமுனைகளினி
பேறனகுளைமருந்தாகிலுமிறர்
  பேசாமல்வாடைப்பொடியாகிலுமனைக்
கூறுகிலுமொருபவசாகிலுமொரு
  கொக்காகிலுமரிக்கொமயாகிலுநாமேறன் (கெம்பா)

பூசியுடுத்துமுடித்துவளையிட்டுப்
  பொட்டிட்டுமையிட்டுப்பொன்னிட்டுப்பூவிட்டுக்
காசுபறிக்கிடுமேவைசியாராக
  கண்ணிக்குளேபடுங்காமுகர்போலவும்
ஆசாரவீனத்துலுக்கனகுகிவா
  யடியெட்டிப்பாறைபடியெட்டிநைபோலும்
தேசத்துகொக்கெல்லாமகண்ணிக்குள்ளேவந்து
  சிக்குதுபார்கதிக்குதுபாரினிச் (கெம்பா)

ஆலாவுங்கொக்குமருகேவருகுது
  ஆசாரகள்ளர்போல்கூனிகிருகுது
வேலான்கன்னியர்ளசையினுறகிழு
  மேலுந்திரிந்திடுமேவடிகரைகாரர்போல்
காவல்திரிந்துத்திரிந்துதிரிந்கைகள்
  கண்ணிக்குள்ளாகும்பறவையைப்போகட்டும்
பாலாறுநெய்யாறுபாய்ந்தெழுப்பட்டத்திற்
  பல்லொழுக்கக்கிழுகல்லசுப்பட்டாற்போல் (கெம்பா)

கவிக்கூற்று - ஆசிரியவிருத்தம்,

தேவிகுழல்வாய்மொழிப்பேர் நாச்சியார்கால செண்பகக்கால்திரு த்தமதிருகுடிஞர்கால், காவியல்வெண்மடைதட்டான் பற்றுக்காளிக்குள மழகர்பள்ளன்கூற்று, வாலிதொறுநின்றுசிங்கன் வேட்டையாடிவருவி பாற்றுக்கால வடகால்தென்கால, கோவில்விளை யாட்டமெங்குங் கண் ணிகுத்திக் கூவினூனவனைவிட்டேவினே,

சிங்கன்சொல்லுதல் இ-ம்-தாபார்- சாப்புதாளம்.

கண்ணிகள்.

நல்வித்தமிழ்க்குறியார்திரிகூடநா காத்கர்பொற்றாள்பரவுஞ்
செல்வக்கடலணையான்குற்றாலச்சிவராமநம்பியெங்கோன்
வல்லமணியபட்டன் பெருமைவளர் சங்கு முத்துநம்பி
வெலதுயகுற்றாலம்பிபுரவெல்லாம் மீன்கொகதிக்கூட்டமையே,
ராளன்பிச்சபிள்ளை திருப்பணிசெல்வப்புதுக்குளமும்
காராளன்சங்குமுத்து திருக்தொடைக்காங்கேயன்கட்டளையும்
மாராஜன்தென்குடிகை வைத்தியநாகன்புதுங்குளமும
தாராளமானபுள்ளும் வெள்ளன்னமூங் தாராவுமேபுதையே
ரணக்கணக்குடனேஸ்ரீபாண்டாரந்தன்மபத்தர்கணக்கும்
வானவர்குறாலர் திருவாசம் மாடநற்பத்தியமும்
ணிகழ்சூழகுடிகை வைத்தியநாதனரபாலன்
தானபிமானம்வைத்த சிவமாரன் சம்பிரதிகணக்கும்
வெதாராயணவேள், குமாரன் விசைத்தொண்டநாடாளன்
சிதான்முத்துமனனன் விசாரிப்புச் சேர்ந்தபுரவினெல்லாம்
ாதலாய்க்கண்ணிவைத்து பறவைக்குக் கவணகட்டிநின்றே
னேதோவொருபறவை தொடர்ந்துவங் தென்னைக்கடிக்குதையே

சிங்கன் சிஙகியை நினைத்துக்கொள்ளுதல் - விருத்தம்.

கா்வலர்திரிகூடத்திற் காதலாற்கலங்கிவந்த
நாவனைப்பழித்துச்சிஙக ஞெக்கியேவேட்டைகாட்டி
லாவல்சேர்காமவேட்டை யாசையாலன்னப்பேட்டைச்
சேவல்போய்புணரக்கண்டான் சிங்கிமேற்பிறமைகொண்டான்

சிங்கியைநினைத்துப் புலம்பல் இ-ம்- ஆதி சாப்புதாளம்.

டுக்குரலிலொருகுரல்கூவும் புறவே - யென்
தேகாந்தச்சிஙகியைக்கூவுந்தென்ன குலாவே
ார்குழலிதன்சாயலைக்காட்டு மயூரமே - யவள்
மார்பிலேழுந்தழலையையுங்காட்டு காரமே

தட்டொத்தகும்பக் கடமுலைகாட்டுஞ் சகோரமே - சற்றுந்
தண்ணெளியாமையெச்சென்றுனை காட்டிவிட்டாளுபகாரமே
கட்டிநிரவியக்கணையோலுநன்னகர்க் காவியே - கண்ணிற்
கண்டிடமெல்லாமவளாகத்தோற்றுது பாவியே

சிங்கனசொல் - கொச்சகக்கலிப்பா.

செட்டிபத்திற்கண்ணிவைத்தேன் சிக்கிரடைச்சாயலினாற்
பெட்டைகுளத்திலன்னப் பேட்டைநடைபார்த்திருந்தேன்
கட்டுற்றநன்னகர்கெநன் கண்ணியெல்லாமொற்றிவெற்றிக்
கொட்டிக்கொண்டையேகுருவி யெல்லாமபோயினுமே.

தரு இ-ம் முகாரி சாப்புதாளம்.

பல்லவி,

போயினுமையே பறவைகள் போயினுமையே

அநுபல்லவி,

போயினுமையே நாயகர்குற்றாலர்
பொல்லாததக்கன் மதத்தையழித்தநாள்
வாயிவடிபட்டடிபட்டுதைபட்டு
வானவர்தானவர் போனதுபோலவே (போயினு)

சரணங்கள்,

மேடையினின்றொரு பஞ்சவர்ணக்கிளி
மின்னாளைக்கபியென் முன்னாகவந்தது
பேடையென்றேயதைச் சேவல்தொடர்ந்தது
பின்னொருசேவலுங்கூடத்தொடர்ந்தது
ஜோடியின்பயிரண்டுக்குமெட்டாமற
சுந்தரசுந்தார் வந்தகலாபத்திற்
காடெல்லாம்பட்சியாய்க்கூடியுளம்பாடிக்
கண்ணியுந்தட்டியென் கண்ணிலுங்கூட்டியே (போயி)

ஆயிரங்கொக்குக்கண்ணியைவைத்துநா
னப்பாலேபோயொருமிப்பாயிருக்கையிற்
ஆயிரகாகங்களாயிரம்பட்டு
மறைத்துவிளைத்துக்கிடப்பதுபோலவே
காயமொகேகிக்கிடந்ததுகண்டுநான்
கண்ணிகழற்றி நிலத்திலேவைத்தபின்
சேயிழைகன்பொருட்டாலேபஞ்சாக்ஷரஞ்
சேவித்தமன்னவன்பாவமபோனாற்போலே (போயி)

தம்பமென்றேநம்பிநோனைச்சதியண்ணித்
தான்வாழ்ப்பார்ப்பவர்செல்வங்கள்போலவும
பாம்புமவடபாலருவியிற்றோய்ந்தவர்
பாவங்கழோயபோலதுபோலவும்

குற்றாலக்குறவஞ்சி

குடபாழ் வீக்குச் சிவமானகாலங்
குறிகட்டு ஓடிப்போனவைணவர் போலவும்
அம்பிகை யாகந் திரிகூடநாத
ரடியவர் மேல்வைத்த அன்பம் போனாற்போலே (போயி)

நூவன்-சிங்கனைப்பழித்தல் விருத்தம்.

வருக்கைபார் திரிகூடத்தின் மாமிமேற்கையும் வலிப்
பருக்கி மேற்கண்ணுமான பாவைபோல் வேட்டைபோறு
கருத்து வேறாய்தாயைக் கற்பித்தமகள் போலெனைச்
சிங்கனை விண்டாவுன்னைச் சிரித்தது காமப்பேயே,

இதுவும் நூவன் சொல்-விருத்தம்,

கடுக்கைபார் திரிகூடத்திற் காமத்தால் வாமக்கண்ணைக்
குடித்தவர் போலே வீழ்ந்தாய் கொக்குக்குப் பயந்து வாழ்ந்தாய்
அடிகளொருவனை வென்சிங்கா வாசையே யுனைவிடாது
செடிக்கொருவலையும் போட்டுச் சிங்கியைத் தேடுவாயே.

சிங்கன்-நூவனுக்குச் சொல்லுதல் விருத்தம்,

வேடுவர் தன் சிறியோர் காண்மைபயிலலாதவனே யென்னை
பூடியிற் சொன்ன பேச்சாலுருவிலி யடைந்தானென் பேர்
போடுவாயப்பப்பாணமபுறப்படமாட்டேனாவா
சேடநேசகூடத்திற் சிங்கியைத் தேடுவாயே

நூவன் சொல் விருத்தம்.

அநங்கனார் திரிகூடத்திலவனை நீயனைந்தாலென்ன
நாக்கலிப்பிரிந்தாலென்ன நூவனுக்குனாட்டம்
கண்ணுமெனக்கேன் சிங்காகா விலையுனக்குண்டானோர்
கொக்கைச் சிங்கி தனைக் கூட்டிவாக் காட்டுவேனே,

தலங்கள் தேடிப்போன விருத்தம்,

திருவண்ணாமலை காஞ்சி திருக்காளத்தி சீர்காழி சிதம்பரந் தென்கு ருகூர் காசி, குருநாடு கேதாரஞ் சோலைகொண்டை கோகரணஞ் செகநாதங் கும்பகோணம், அரியலூர் சோகத்திருவானைக்காவடங்கலும் போய்ச் சிங்கி தனைத் தேடிச்சிங்கன், வருசிறுப்பாளிவிட்டு மதுரை தேடி மதிகொண்டா வரிகூடமெதிர்கொண்டானே.

வில்லிபுத்தூர் கருவைநல்லூர் புன்னைக்காவு வேள்திருச்செந்தூர்கு ருகூர் ஸ்ரீவைகுந்தம் நெல்வேலி சிங்கிகுளஞ் சேவல்லூர் பலதருசெற்றூர்

குமரிதிருவாங்கோடு - சொல்லரிய குருங்கைகளக்காடுதேடித் தொண் மருத்தூர்கதாழநல்லூர்தேடிச் - செல்வருநைறை சிவசைலம பாவநாசந்தி ரிகூடம்சிங்கிதனைத் தேடுவானே,

சிங்கனசொல்லுதல-இ ம நீலாம்புரி-ஆதிதாளம்,

கண்ணிகள்.

க, பேடைக்குயிலுக்குக் கண்ணியைவைத்துநான் மாடப் புறாவுக்குப் போனேன்-மாடப்புறாவுக்குயிலும்படுதேனே வேடிக்கைச் சிங்கியைக் [காணேன்

உ, கோலமயிலுக்குக்கண்ணியைவைத்துநானாலாப்படிக்கவேபோனேன ஆலாவுங்கோலமயிலும படுதேன்மாலான சிங்கியைக்காணேனே

ங, வவ்வாற்பறவையினவேட்டைக்குப்போய்க்காம வெவ்வேட்டைதப் பிவிட்டேன்- வவ்வால்படுக்கமறநாயகப்பட்டவைபோகமாச்சுதானே

ச, இவ்வாறுவந்தவென்னெஞ்சில்விகாரத்தை எவ்வாறுதீர்த்துக்கொள் வேனே, செவ்வாயககருமைபையநாகவல்லியைசிங்கியைக்காண்கிலனே

குற்றாலத்தில் சிங்கன்-சிங்கியைத் தேடுதல்

விருத்தம்,

நற்றாலந்தன்னிலுள்ளோர்யாவரோனுநன்னகரத்தலத்தில்வந்துபெ றுவார்பேறுபெற்றாதா, னன்னகர தலத்தைவிட்டாற் பிரமலோகம்வ ளாக்கும் பேறுண்டாமோ, வறாதவட்டவருவிச் சாரீங்கி வடகாசிகும ரிமட்டு மலைந்தசிங்கன், குற்றாலத்தலத்தின்முன்னே தவத்தால் வந்து கூடினான சிங்கிதனைத்தேடினானே,

சிங்கியைக்காணுமற் புலம்பல-தரு இ-ம-தோடி-ஆதிதாளம்.

பல்லவி,

சிங்கியைக்காணேன்-என்வங்கணச்-சிங்கியைக்காணேனே.

அநுபல்லவி,

சிங்கியைக்காமப் பசுங்கிளிப்பேடையைச்
சீர்வளர்குற்றாலர் பேர்வளம்பாடிய
சங்கீதவாரியை யிங்கிதநாரியைச்
சல்லாபக்காரியை யுல்லாசமோகன (சிங்கி)

சரணங்கள்,

க, ஆரத்தநத்தைப்படங்கொண்டுமூடியசைத்துநின்றாளதையானைக்கொ ம்பென்றே - கோரத்தைவைத்த விழிக்கெதிர்சென்றேன் கொஞ்சத் தனத்தையறிந்துசுகக்காறி-பாரத்தனத்தைத் திறந்துவிட்டாள்கண்டுபா

சா

…யேனுவி மறந்துவிட்டேனுடன் - நீக்கமியமயக்கி முயக்கியே சிங்கா ரமோகனைச் சிக்கிக்கொண்டாளந்த, (சிங்கி)

௫, பூவென்றபாதம்வருடிவருடிப் புளகமுலைபனைநெருடி நெருடியே வென்றகண்ணுக்கோ ரஞ்சனந்தீட்டியெடுத்துச் சுருளையிதழா லிடுவகு வள்வாவென்று கைச்சுருள்தாவென்று நானுமதற்குக்குறி கண்டுநகக் குறிவைத்தபினனுவென் னுருக்காலுமைப்பளதுகிடந்து கொதிக்குதென்பேய்மனம், (சிங்கி)

௬, தாராடுங்குன்றிவடத்தையொதுக்கித் தடமார்பிறுகத் தழுவவந்தாலவள் - வாராடுங்கொங்கைக்குச் சந்தனம்பூசாள் மறுக்கூரக்காமப்பூசினும் பூசலாகாதென்பள் - சீராடிக்கூடி விளையாடிப்படி திராமயல்தந்த தீரண்மைக்காரியைக் - காராடுகண்டா தென்னாட்டுறைகாரிகைப்பூவையை யாரியபாவையைச், (சிங்கி)

நூவன்வினவுதல் - கொச்சகக்கலிப்பா,

சங்கமெல்லாமுத்தீனுஞ் சங்கர்திரிகூடவெற்பில்
பொங்கமெல்லாஞ்செய்யுமுங்கள் பொங்கமெல்லாம்யாரறிவார்
சிங்கமெல்லாமொத்ததுடிச் சிங்காவுஞ்சிங்கிதனைக்
கங்கமெல்லாஞ்சொல்லி யடையாளஞ்சொல்வாயே,

தரு-௩௰-பியாகடை-மீசரதாளம்,

பல்லவி,

கறுப்பிலழகியடா - காமக - கறுப்பிலழகியடா

அநுபல்லவி.

சுறுக்கிலழகிசிங்கி சுகக்காறி (கறுப்பி)

சரணங்கள்,

௧, கண்களிரண்டுமம்புக் கணைபோலநீண்டிருக்கும்
கையத்தனையகலக்காணுமடா
பெண்களைமயக்குமவள்விழிகப்பார்வை
சிலைபிடித்தாமல்தப்பயலும்பெலப்பானே (கறுப்பி)

நகையுமுகமுமவள் நாணையக்கைவீச்சும்
பகைவருமபிரிந்துபாராபடாரடா
தொகையாச்சொனனேனினிச்சொல்லக்கூடாதொரு
வகையாய்வருகுதென்னை மயக்குதையேஐயே (கறுப்பி)

விடையிலவரும்பவனி யுடையர்திருக்குற்றாலா
சடையிலிளம்பிறைபோல்தனிநுதலாள
சடையிலழகுமிருதுடையிலழகுமவ
ளுடையிலழகுமென்னை யுருக்குதையேஐயே (கறுப்பி)

கொச்சகக்கலிப்பா. 124991(8584)

சாட்டிகிற்குமண்டமெல்லாஞ் சாட்டியில்லாப்பம்பரம்போ
லாட்டுவிக்குங்குற்றாலத் தண்ணலார்நன்னாட்டில்
காட்டுவிக்குமுன்மோகக் கண்மாயச்சிங்கிதனைக்
கூட்டிவைக்கும்பேர்களுக்குக் கூலியென்னசொல்வாயே

இ ம்-தர்பார் ரூபகதாளம் - கண்ணிகள்,

க, வாடைமருந்துப்பொடியும் அம்மியூர்
மரப்பாவைபின்றொடரமாயப்பொடியும்

உ, கூடியிருக்கமருந்தும் இருபொழுதும்
கூடியிருப்பார்சளைக்கலைக்கமருந்தும்

ங, காடுகட்டக்கிளிக்கட்டு குறளிவித்தை
கண்கட்டுவித்தைகளுங் காட்டித்தருவேன்

ச, வேடிக்கைக்காமரகிபோல் திரிகூட
வெற்பிலுறைசிங்கிதனைக்காட்டாயையே

ரு, மலைபக்கரையப்பண்ணுவேன் குமரிகட்கு
வாராதமுலைகளும்வரப்பண்ணுவேன்

சா, முலையையொளிக்கப்பண்ணுவேன் ஒளித்தபேனா
மோகினிமந்திரஞ்சொல்லிவரப்பண்ணுவேன்

எ, திலதசீரகஞ்செயவேன் ஒருவருக்குந்
தெரியாமற்போகவாசித்துமறிவேன்

அ, கலகமதனப்பல யென்மீதிற்கண்
காட்டிவிட்டசிங்கிதனைக்காட்டாயையே

நூவன்சொல்லுதல் - கொச்சகக்கலிப்பா,

ஆற்றைமான்கடத்திவிட்டா லாகாசமார்க்கமோடத்
தேற்றநீயறிவாயல்லோ திரிகூடமலையிற்சிங்கா
சாற்றுமுன்மருந்துபோலச் சகலர்க்குங்குறிகள்சொல்லிப்
போற்றுமுனசிங்கிபோன புதுத்தெருவிதுகண்டாயே

சிங்கன்-சிங்கியைக்காணாமல் - வருந்துதல்,

தரு - இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

எங்கேதான்போனாளோ- என்சிங்கியிப்போ
எங்கேதான்போனாளோ

அநுபல்லவி,

கங்காளாதிரிகூடர் கர்த்தாதிருநாடுதனில் (என்)

சரணங்கள்,

௧, வேளாங்கிலுமயக்குவள் வலியநாட்டில்
கோளாமலுமுயக்குவள்
ஆளாயிறனுமா யாரை யெங்கேகண்டாரோ
தோளாசைக்காரிசிங்கி சும்மாகிடக்கமாட்டாள் (எங்கே)

மெய்க்குறியாலெங்குஞ்சொல்லுவள் மனக்குறியுங்
கைக்குறியுங் கண்டுசொல்லுவாள்
திக்கிலடங்காதுகுறி யிக்குறடங்காதுமொழி
மைக்குளடங்காதுவிழி கைக்குளடங்காதுகள்ளி (எங்கே)

௩, சித்திரச்சபேசர்மேலே சிவசமயப்
பத்தியில்லாப்பேயர்போலே
குகதியிலாக்குங்கள்ளரும் குடிவையிற்றென்னங்கள்ளரும்
அத்தனைபுங்குடித்துப்போட்டார்பிறகேதொடர்ந்தாளே (எங்கே)

சிங்கியெதிர்ப்படுதல்-விருத்தம்,

தேம்பூனைக்குற்றாலநாதர் திருநாட்டி லிருவருந் தாங்கண்டபோதே, காதலெனுங்கடலபெருகிக்கரைகொள்ளாமற் கலக்கும்போது வலைகுறுக்கிட்டாற்போல், வீதிவந்து குறுக்கி வேநாணமபூண்டவின்னுணைச்சிங்கிதனைக் கண்டுசிங்கன், தூதுவந்தகளனுன்னை கன்னிமாடந்துலங்குதமயந்தியெனத் தோன்றினளே,

தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-சாப்புதாளம்,

பல்லவி,

இங்கேவாராய் - என்கண்ணே - இங்கேவாராய்,

அநுபல்லவி,

இங்கேவாராயமலர்ச செங்கைதாராய்மோகச்-சங்கைபாராய்
காமச் சிங்கியாரேயிப்போ (இங்கே)

சரணங்கள்,

௧, பாதம்நோமே நொந்தால்மனம்-பேதமாமே
பாதம்நோகநிறபதேது பாலமினிகூதலோகொடிதுகாதலோகடினம் ()

௨, பாவிதானே-மகன்கனே-எவினேன்
காவில்மாங்குயில்கள்கூவிக்கூவினைதாவிசோருதுன்னையாவிபாவிகட்ட

௩, வருக்கைமலர்-வடவருவித் திருக்குற்றாலர்
பெருக்கம்பாடிக்கொள்ளமருக்கள்சூடிக்கொள்ளஒருக்காலூடிக்கொள்ள
இருக்கால்கூடிக்கொள்ள (இங்கே)

சிங்கன் சிங்கியைக்கண்டுமகிழ்தல்-கொச்சகக்கலிப்பா.

தெண்டாடுஞ்சுந்தரர்க்குத் தோழர்திரிகூடவெற்பிற்
றிண்டாடிநின்றசிங்கன் சீராடுஞ்சிங்கிதனைக்
கண்டாடித்துள்ளாடிக் கள்ளாடுந்தும்பியைபோற்
கொண்டாடிக்கொண்டாடிக் கூத்தாடிக்கொண்டானே.

சிங்கனுக்கும் சிங்கிக்கும் சம்வாதம்

இ-ம்-தன்யாசி-ஆதிதாளம் - கண்ணிகள்,

(சிங்கன்) இத்தனைநாளாக வென்னுடன்சொல்லாமல்
எங்கேநடந்தாயடி சிங்கி — எங்கே

(சிங்கி) கொத்தார்குழலார்க்கு விஸ்தாரமாக
குறிசொல்லப்போனேனடா சிங்கா — குறிசொ

(சிங்கன்) பார்க்கிலதிசயந் தோணுதுசொல்லப்
பயமாவிருக்குதடி சிங்கி — பயம

(சிங்கி) ஆர்க்குப்பயமினித் தோணினகாரியம்
அஞ்சாமற்சொல்லடா சிங்கா — அஞ்சா

(சிங்கன்) காலுக்குமேலேபெரியவிரியன்
கடித்துக்கிடப்பானேன்சிங்கி — கடித்

(சிங்கி) சேலத்துநாட்டிற் குறிசொல்லிப்பெற்ற
சிலம்புகிடக்குதடாசிங்கா — சிலம்

(சிங்கன்) சேலத்தாரிட்டசிலம்பிற்குமேலே
திருகுமுருக்கென்னடிசிங்கி — திருகு

(சிங்கி) கோலத்துநாட்டார் முறுக்கிட்டதண்டை
கொடுத்தவரிசையடாசிங்கா — கொடுத

(சிங்கன்) நீண்டுக்குறுகியும்நாங்கூழ்ப்போல
நெளிந்தநெளிவென்னடி சிங்கி — நெ

(சிங்கி) பாண்டியனார்மகள் வேண்டுங்குறிக்காகப்
பாடகமிட்டதடாசிங்கா — பாட

(சிங்கன்) மாண்டத்தலையுன்காலிலேகட்டிய
மார்க்கமதேதடிசிங்கி — மார்க்க

(சிங்கி) ஆண்டவர்குற்றாலர்சந்நிதிப்பெண்க
ளணிமணிக்கெச்சமடாசிங்கா — அணிமணி

(சிங்கன்) சுண்டுவிரல்தோறுங்குண்டலப்பூச்சி
சுருண்டுகிடப்பானேன்சிங்கி — சுருண்

ங்கி) கண்டியதேசத்திற் பண்டுநான்பெற்றது
காலாழிபீலியடா சிங்கா — காலாழி

ங்கன்) மெல்லியபூந்தொடைவாழைக்குறுத்தை
விரித்துமடித்தவரார் சிங்கி — விரித்து

ங்கி) நெல்வேலியார் தந்த சல்லாபச்சேலை
நெறிபிடித்தே தொடுத்தார் சிங்கா — நெறி

ங்கன) ஊனக்குமேற்கேயுயர்ந்தவாசிலே
சாரைப்பாம்பேதடி சிங்கி — சாரைப்

ங்கி) சீர்பெற்றசோழன் குமாரத்தியார்தந்த
செம்பொன்னரைஞாண்டா சிங்கா — செம்பொ

ங்கன்) மார்பிற்குமேலே புடைத்தசிலந்தியின்
கொப்புளங்கொள்வானேன் சிங்கி — கொப்பு

ங்கி) பாருக்குள்ளேற்றமாம் காயங்குளத்தார்தந்த
பாரமுத்தாரமடா சிங்கா — பாரமு

ங்கன்) ஆசாவடமெல்லாமங்ஙனேகூடவே
ஆவாரைப்பூக்கதடி சிங்கி — ஆவாரை

ங்கி) ஏகாவடமென்றுசீர்காழியாரெனக்
கிட்டவரிசையடா சிங்கா — கிட்டவரி

ங்கன) எட்டுப்பாவை குழற்றுகழுத்திலே
பக்கெட்டுப்பாம்பேதடி சிங்கி — பக்கெ

ங்கி) குட்டக்குநாட்டாரும் காயங்குளத்தாரும்
இட்டசவடியடா சிங்கா — இட்டச

மெட்டு-இ-ம் புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்,

ங்கன் வளைக்கொடியிலேதுத்திப்பூப்பூர்ப்பானேன் சிங்கி
ங்கி காதிலவங்காளத்தாரிட்ட சிங்காரக்கொப்படா சிங்கா
ங்கன கள்ளியப்பூப்பூப்பதிசயமல்லவே சிங்கி
ங்கி தெருக்குவளையூரார்தந்தமாணிக்கத்தண்டோடா சிங்கா
ங்கன் வண்ணக்குமிழிலேபுன்னையரும்பேது சிங்கி
ங்கி மணவிலதுனனீச்சலாபத்து முத்துமூக்குத்திகாண் சிங்கா
ங்கன சொருகிமுடித்ததில நாககணமேதடி சிங்கி
ங்கி தென்குருகையூரார்தந்த குப்பியுந்தொங்கலுஞ் சிங்கா
ங்கன் விந்தையாமமேலெல்லாம்பணிவெட்டிப்பார்ப்பானேன் சிங்கி
ங்கி இந்தவண்ணப்பணிகளின்மாணிக்கக்கல்லொளி சிங்கா

சிங்கன் முலைமேற்றுசேலைதைத்துமூடக்கிடப்பானேன் சிங்கி
சிங்கி செவ்வி-முலைமாதர்க்கது வேதக்கைச்சடா சிங்கா
சிங்கன் முடிக்கிடப்பவுமாறமறநாதலைப்பானேன் சிங்கி
சிங்கி இது-ஆடைநிந்தகளால வாடைப்பொடியடா சிங்கா
சிங்கன் அந்தப்பொடியால முலைவீக்கமபோமே சிங்கி
சிங்கி வீக்கம்-ஆறுவணக்கெண்ணபோறுவணக்கெண்ணா சிங்கா
சிங்கா இந்தப்பணியைப்பூணப்பொறுக்குமோ சிங்கி
சிங்கி புலிநகத்துக்குகறமேரேர்க்கும எல்லாமபொறுக்குங்காண் சிங்கா
சிங்கன் குலைத்தைப்பார்த்தாய கொடியிடைதாங்குமோ சிங்கி
சிங்கி தண கொடிக்குச்சுரைக்காய் கனத்துகிடக்குமோ சிங்கா
சிங்கன் இல்லாதசிக்கெல்லாமெனக்கேபடிக்காடி சிங்கி
சிங்கி காட்டிலநல்லாளைக்கண்டாற்கொத்துமடா சிங்கா
சிங்கன் பெட்டகப்பாம்பை பிடித்தாட்டவேண்டாமோ சிங்கி
சிங்கி இந்த-வெட்டவெளியிலே நாடிப்பாம்பாடுமோ சிங்கா
சிங்கன் கட்டிக்கொண்டேறந்த முத்தம்கொடுக்கவோ சிங்கி
சிங்கி நடிப்-பட்டப்பகலிலதாவெட்டுக்கொடுப்பேனே சிங்கா
சிங்கன் முட்டப்படாமுலையானையைமுட்டவோ சிங்கி
சிங்கி காமமட்டுப்படாவிட்டால மண்மேலேமுட்டடா சிங்கா
சிங்கன் சேலையுடைத்தனைச்சற்றேநெகிழ்க்கவோ சிங்கி
சிங்கி சும்மா-நாலுபேர்முன்னேனென்னைநாணமெடுக்காதே சிங்கா
சிங்கன் பாதம்வருடித்துரைக்குத்தமவேண்டாமோ சிங்கி
சிங்கி மனமபோகமவருதபோய்ப் பூனையகுத்தடா சிங்கா
சிங்கன் நாக்குத்துடிக்குது நலவாயிதழுக்கு சிங்கி
சிங்கி உன்றன்-வாய்க்குள்ளிருப்பது மாலைக்கள்ளல்லவோ சிங்கா
சிங்கன் ஒக்கப்படுக்கவோ ஒதுக்கிடமபாக்கவோ சிங்கி
சிங்கி பக்கங்கொக்குப்படுக்கக் குறிப்பிடப்பாரடா சிங்கா
சிங்கன் சிங்காரக்காரியுனை வெல்லக்கூடாதடி சிங்கி
சிங்கி அது சந்தேகமோவுன் தலைப்பேனைக்கேளடா சிங்கா
சிங்கன் தென்னாட்டெலாமுன்னைத் தேடித்திரிந்தேனே சிங்கி
சிங்கி அப்பாலிநாட்டிலவந்தென்னையெப்படிநீகண்டாய் சிங்கா
சிங்கன் நன்னகர்க்குற்றால நாதனைவேண்டினேன் சிங்கி
சிங்கி மணிப்பன்னகம்பூண்டானைப்பாடிக்கொண்டாடுவோம் சிங்கா
சிங்கன் பாடிக்கொள்வாரெவர் ஆடிக்கொள்வாரெவர் சிங்கி
சிங்கி நீதான்-பாடிக்கொண்டாற்போதுமாடிக்கொள்வேனடா சிங்கா

நேரிசைவெண்பா,

சுற்றுகவூர்தோருஞ் சுத்தவேண்டாம்புவியீர்
குற்றாலமென்றொருக்காற்கூறினன்-வற்றா
வடவருவியானே மறுபிறவிசேறா
னடவருவியானே நமை,

வாழ்த்து - கண்ணிகள்.

௧, கொற்றமதிச்சடையானைக்குற்றம்பலமுடையானை
வெற்றிமழுப்படையானைவிடையைவாழ்த்துகிறேன்
௨, தாதையில்லாத்திருமகனைச்சடமலைக்குமருமகனை
வேதசகவிதியானைவேதியனைவாழ்த்துகிறேன்
௩, தந்திமுகற்கொருகோனைத்தமிழிலஞ்சிமுருகோனை
மைந்தனொனுபினையோனைமந்தையோனைவாழ்த்துகிறேன்
௪, திமுகத்திற்பறிகொடுத்ததிரிமுடிக்காயொருமுடியை
மாமனுக்குவரிசையிட்டமகனைவாழ்த்துகிறேன்
௫, காமனுக்குமபூமனுக்குங்கனவிதெய்வயானைக்கும்
மாமனைவேபகரும்வளநன்னைவாழ்த்துகிறேன்
௬, நீடுலகெலாமளாவநெடியமாலுமயனும்
தேடரியதிரிகூடசெல்வனையான்வாழ்த்துகிறேன்
௭, சித்ரநதிபடைத்தானைத்தேனருவிகடத்தானைச்
சித்ரசபைநடத்தானைத்திடத்தானைவாழ்த்துகிறேன்
௮, காலவயிரவனைக்காவிலைவளர்த்தவனை
மேலைவாசப்பலனைமெனமேலும்வாழ்த்துகிறேன்
௯, கருதுலகமெங்குமபுகழ்கன்னிமார்பெணகளையும
வரிசைதுரைத்தளவாய்மாமனையும்வாழ்த்துகிறேன்
௰, பணமணிபூண்டவனைப்பக்தர்களையாண்டவனை
அனவரதத்தாண்டவனை யாண்டவனைவாழ்த்துகிறேன்

விருத்தம்,

ஊர்வாழ்த்தனத்திருகுழல்வாய்மொழியம்பிகைவாழிவதுவைப்பூட்டுந்
தார்வாழிதிரிகூடத்தார்வாழிகுருமுனிவன்றலைநாட்சொன்ன
பேர்வாழியரசர்கள்செங்கோல்வாழிநன்னகரப்பேராலோகரும
ஊரவாழிகுற்றாலத்தலத்தடியர்வாழிநீடூழிதானே,

குற்றாலக்குறவஞ்சி

முற்றிற்று,

MAH... DR U.V. SWAMINATHA IYER LIB... TIRUVANMIYUR MADRAS